

மலர் 1 இதழ் 8

சாதி
ஒழிப்போம்!
தமிழரை
இணைப்போம்!
தமிழ்த் தேசு
இறையாண்மை
மீட்போம்!


ஆசிரியர்

திருமொழி

ஆசிரியர் குழு

பாரி
ரூபன்
முத்துமுருகன்
செந்தில்

சட்ட ஆலோசனை

வழக்கறிஞர் இரா.வைத்தீஸ்வரன்



தொடர்பு முகவரி

243/1, பெரியார் நகர்,
காட்டு நாவல்,
கந்தர்வகோட்டை அஞ்சல்,
புதுக்கோட்டை மாவட்டம்.
அ .கு .எண் 613 301

தொடர்பு எண்கள் :
76674 43935
99431 14128


தனிச்சுற்றுக்கு மட்டும் நன்கொடை ரூ20/-



# பிஜேபியின் ஜனபத திட்டமும்-எதிர்ப்பு அரசியலும்.

-தோழர் திருமொழி

இந்துத்துவ பாசிச மோடி ஆட்சி வீழ்த்தப்பட வேண்டும். இதில் இடதுசாரிகளும், ஜனநாயக ஆற்றல்களும் ஒரே நிலைபாட்டை பின்பற்றுகின்றனர்.

கம்யூனிஸ்ட்டுகளைப் பொறுத்த அளவில் முதலாளிய பாராளுமன்றங்களிலும் சட்டமன்றங்களிலும் நடைபெறும் தேர்தலில் அடையும் வெற்றியும், தோல்வியும் புரட்சியின் இலக்கின் ஒரு சிறு பகுதியே! அச்சிறு பகுதியில் அடையும் வெற்றியும், தோல்வியும் மக்கள் புரட்சியை முன்னெடுக்க அதன் செயல்பாடுகளுக்கு வழிகாட்டும்.


தமிழ்த் தேச இறையாண்மை அமைப்பை பொறுத்த அளவில் மக்களின் இன்றைய உடனடி தேவைகளையும் அவர்களின் செயல் ஆற்றல்களையும் கணக்கில் கொண்டும், அமைப்பின் பலம், பலவீனம் மற்றும் ஆளும் வர்க்கக் கட்சிகளுக்கு இடையிலான அணிசேர்க்கை, மக்களின் அரசியல் உணர்வு மட்டம் அல்லது தயார் நிலை ஆகியவற்றினை கணக்கில் கொண்டும் தேர்தல் செயலுத்தியை வகுத்துள்ளது.

தமிழ்த்தேசிய இனத்தின் இறையாண்மை அரசியல் அதிகாரத்தை குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் அதே நேரத்தில் மோடி ஆட்சி உடனடியாக வீழ்த்தப்பட வேண்டும். அதற்கான குறிப்பான திட்டத்தை வரைவு அறிக்கையாக முன் வைத்து, ஆர். எஸ். எஸ். மற்றும் பி.ஜே.பி. பாசிச மோடி ஆட்சிக்கு எதிராக அனைவரையும் அணி திரட்ட வேண்டும். மோடியின் கடந்த 10 ஆண்டுகால ஆட்சியில் பாசிச ஆர். எஸ். எஸ். பிஜேபி மோடி கும்பல் ஆட்சித் துறையில் (government) மட்டுமல்ல, அதிகாரத்திலும் (state) எல்லா மட்டங்களிலும் ஊடுருவி உள்ளது. இவை முற்றாக துடைத்தெறியப் பட வேண்டும்.

ஆர்.எஸ்.எஸ். என்ற பார்ப்பன வெறி பிடித்த அமைப்பின் வழிகாட்டுதலில் செயல்படும் பி.ஜே.பி. மோடி ஆட்சியானது பார்ப்பனிய

கொள்கைகளையும் நிலவுடமை பிற்போக்கு கொள்கைகளையும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கார்ப்பரேட் முதலாளிகளுக்கு ஆதரவான கொள்கைகளையும் செயல்படுத்தி வந்துள்ளது. இக்கொள்கைகளுக்கு எதிராக போராடிய மகாராஷ்டிராவில் நரேந்திர தபோல்கர், கோவிந்பன்சாரே, கல்புர்கி, கர்நாடகத்தில் கௌரிலங்கேசு ஆகியோர் படுகொலைச் செய்யப்பட்டனர். தமிழ்நாட்டிலும் பிற மாநிலங்களிலும் அவர்களது கொலைப் பட்டியலில் சிலர் உள்ளனர்.

அதானி, அம்பானி போன்ற குஜராத் முதலாளிகளுக்காகவும் பன்னாட்டு கார்ப்பரேட் முதலாளிகளுக்காகவும் அதாவது இவர்களது சந்தை விரிவாதிக்கத்திற்காகவே அகண்ட பாரத கனவுகளுடன் செயல்படும் மோடி அரசு இந்தியாவை 100 ஜனபத மண்டலங்களாக மாற்றும் திட்டத்தின் ஒரு பகுதியாகவே காஷ்மீரை மூன்றாக பிரித்தது. தமிழ்நாட்டை மூன்று ஜனபத மண்டலங்களாக பிரித்து மாற்றும் திட்டத்துடன் உள்ளது. ஜனபதம் என்பது பார்ப்பனர்களை தலைமை இடத்தில் வைக்கும் சாதிய அமைப்பு முறையாகும். இதன் மூலம் தேசிய இனங்களை பிரித்து மோதவிட்டு இன அழிப்பு செய்வதாகும்.



மோடியின் மேக் இன் இந்தியாவை ஆராய்ந்தால் அதில் சீழ்நெடி வீசுகிறது. உலக அளவில் வறுமை குறியீட்டில் 111வது நாடாகவும் கல்வியில் பங்களாதேஷ், நேபாளத்தைக் காட்டிலும் கீழான நிலையிலும் இந்தியா உள்ளது. அதானி, அம்பானி போன்ற கார்ப்பரேட் முதலாளிகளின் கடன்களில் 25 லட்சம் கோடியை இரத்து செய்ததுடன் அவர்களுக்கு ஆண்டுக்கு 10 இலட்சம் கோடியை வரி சலுகையாக அறிவித்துள்ளது. அதே நேரத்தில் விவசாயிகளையும் தொழிலாளர்களையும் வறுமையில் நெட்டித் தள்ளியுள்ளது. 2014இல் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தப் போவதாக கூறிய மோடி அரசு 3 வேளாண் சட்டங்களை வெளியிட்டது. அதனை எதிர்த்து விவசாயிகள் 14 மாதங்கள் போராடியுள்ளனர். அதில் 700 விவசாயிகள உயிரிழந்தனர். அப்பொழுது உலகையே சுற்றிவந்த மோடி விவசாயிகளின் போராட்டத்தை எட்டிக்கூட பார்க்கவில்லை. தற்போதும் விவசாயிகள் போராடிக் கொண்டுள்ளனர். ஒரு நாளைக்கு 30 விவசாயிகளும் 17 விவசாயக் கூலிகளும் வறுமையில் இறப்பதாக புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. 2019ல் விவசாயிகளுக்கு வட்டி இல்லா கடன் ஒரு லட்சம் வழங்கப் போவதாக அறிவித்தது. ஆனால் யாருக்கும் வழங்கவில்லை. ஜி. எஸ். டி. வரியால் மாநிலங்களில் உள்ள சிறு முதலாளிகள் நடுத்தர வர்க்கங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக தமிழ்நாட்டில் கோவையும் திருப்பூரும் பாதிப்படைந்துள்ளது.

மோடி குஜராத்தில் முதல்வராக இருந்த போது மத்திய அரசின் வருவாயில் 50 விழுக்காடு கேட்டார். தற்போது தமிழ்நாடு அரசு மத்திய அரசிடம் வெட்கமில்லாமல் பணம் கேட்பதாக சாடுகிறார். தமிழ்நாட்டிற்கான மத்திய அரசின் ஜி.எஸ்.டி. தொகையை தரவில்லை. தமிழ்நாட்டில் வரலாறு காணாத வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோது சிறு தொகையும் தராத மோடி குஜராத்திற்கு வாரி வழங்குகிறார். சென்ற தேர்தலில் கருப்பு பணங்களை கைப்பற்றி குடும்பத்திற்கு 15 லட்சம் வழங்கப்படும் என வாய்ச்சவடால் அடித்தார். இவரது பணம் மதிப்பிழப்பு நடவடிக்கையால் நூற்றுக்கணக்கானோர் வங்கியின் வரிசையில் நின்று இறந்து போனது தான் மிச்சம். பெட்ரோல், டீசல், கேஸ் விலை விண்ணை முட்டுகிறது. கேஸ் விலை 400 ரூபாயிலிருந்து 1000 ரூபாய்க்கு உயர்த்தி தற்போது தேர்தலுக்காக 100 ரூபாய் குறைத்து மோடி நாடகமாடுகிறார். ஊழலையே சட்டபூர்வமாக்கியவர்கள் பிஜேபி கும்பல் என்றால் மிகையில்லை. தேர்தல் பத்திரம், பிஎம்.கேர் என அரசமைப்பு விதிகளை வளைத்து கோடி கோடியாய் கொள்ளை அடித்துள்ளது மோடி கும்பல்.

மோடியின் பத்தாண்டு கால ஆட்சியில் பெண்களும் இளைஞர்களும் பெரும் இன்னல்களுக்கும் இழிவுகளுக்கும் உள்ளாகியுள்ளனர். 2014ஆம் ஆண்டு தேர்தலில் ஆண்டிற்கு இரண்டு கோடி வேலை வாய்ப்புகள் வழங்கப்படும் என்றார். ஆனால் 2013இல் 17.3 இலட்சம் மத்திய அரசு பணியில் இருந்த ஊழியர்களை 2022 ல் 14.6 லட்சம் ஆக குறைத்தார். இந்தியாவில் வேலை இல்லாதோர் 24 விழுக்காடாக உயர்ந்துள்ளது. நீட், கியூட் போன்ற நுழைவுத் தேர்வின் மூலம் ஏழைகளின் கல்வி உரிமை பறிக்கப்பட்டுள்ளது.

“பேட்டி பசாவோ” மோடி கும்பல் பெண்களை பாதுகாப்பது என்கிறது. பிங்கிஸ்பானு, உன்னங் சிறுமி, மணிப்பூர் பெண்கள், புதுச்சேரி ஆர்த்தி ஆகியோர் சூறையாடப்படுகின்றனர். உலகிலேயே பெண்களுக்கு பாதுகாப்பற்ற நாடாக இந்தியா இருக்கிறது என்று 2018 ஆம் ஆண்டு தாம்சன் சாய் தார் என்ற நிறுவனம் அறிவித்துள்ளது.

இவ்வாறு அதானி, அம்பானி போன்ற உள்நாட்டு வெளிநாட்டு கார்ப்பரேட் முதலாளிகளுக்காக அனைத்து தரப்பு மக்களும் காவு வாங்கப்படுகின்றனர். இதனை திசை திருப்பி அப்பாவி மக்களை ஏமாற்ற மோடி பாசிச கும்பலுக்கு “ஜெய் ஸ்ரீராம்” முழக்கம் தேவைப்படுகிறது. ஜெய் ஸ்ரீராம் முழக்கம் மக்களை சாதி அடிப்படையில் மத அடிப்படையில் பிரித்து மோதுவிட்டு இரத்தம் குடிக்கும் நோக்கம் கொண்டதாகும். மக்களின் இரத்தத்தை நிரந்தரமாகக் குடிக்கத்தான் அயோத்தியில் இராமருக்கு கோவில்.

## ஆர்.எஸ்.எஸ்

1925 ஆம் ஆண்டு செப்டம்பர் 27ஆம் நாள் விஜயதசமி அன்று சித்பவன் பார்ப்பனர்களைக் கொண்டு ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பு நாக்பூரில் தொடங்கப்பட்டது. தலைவர்கள் தேர்வு செய்யப்படுவதில்லை. தற்போது தலைவராய் இருப்பவர் அடுத்த தலைவரை தேர்வு செய்வார். பொதுச்செயலாளர் மட்டுமே மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்வு செய்யப்படுகிறார். துணைச் செயலாளர்கள் மட்டுமே 20 பேர் தேர்வு செய்யப்படுகிறார்கள். ஆர்.எஸ்.எஸ் என்ற பார்ப்பனிய அமைப்பு அகண்ட பாரதத்தில் இந்துராஷ்ரம் அமைக்கவே தொடங்கப்பட்டது. ஆர்.எஸ்.எஸ்.இன் அரசியல் பிரிவுதான் பிஜேபி. இந்து முன்னணி, இந்து மக்கள் முன்னணி, குரங்கு (பஜ்ரங்தள்) முன்னணி போன்ற 30க்கும் மேற்பட்ட அமைப்புகள் அதிகாரபூர்வமாக ஆர்.எஸ்.எஸில் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றினை சங்பரிவார் கும்பல் என்கிறோம். ஆர்.எஸ்.எஸ் உடன் அதிகாரபூர்வமற்ற முறையில் ஆயிரத்துக்கும் மேலான அமைப்புகள் இயங்கிக் கொண்டுள்ளன. அவ்வமைப்புகள் உழைக்கும் மக்கள் மீது தொடுக்கும் கேடுகளுக்கு ஏற்ப ஆர். எஸ். எஸ். உடன் இணைக்கப்படுகின்றன. எல்லா கட்சிக் கிளைகளிலும் அதிகார மட்டத்திலும் ஆர்.எஸ்.எஸ் உறுப்பினர்கள் இரகசியமாக ஊடுருவியுள்ளனர். இவர்கள் எல்லா அமைப்புகளையும் சிதைப்பதை நோக்கமாகக் கொண்டவர்கள். ஆர்.எஸ். எஸ். தொடங்குவதற்கு முன்பே இந்துத்துவா கொள்கை உடன் பார்ப்பனர்கள் பெருமளவு காங்கிரஸில் செயல்பட்டனர். காந்தியும் நேருவும் மக்கள் தலைவர்களாக பெருமளவு முன்னிறுத்தப்பட்டனர். காந்தி இந்து மதவாதியாக இருந்தாலும் இந்துத்துவ கொள்கையும் இந்து நாடு என்ற கொள்கையும் கொண்டவர்கள் அல்ல. ஆகையால் ஆர்.எஸ். எஸ்.இன் பின்னணியால் காந்தி படுகொலை செய்யப்பட்டார்.

காந்தியின் படுகொலையை தொடர்ந்து 1948ல் 1975-1977 அவசரநிலை காலத்தில் 1992 இல் பாபர் மசூதி இடிக்கப்பட்ட போதும் ஆர்.எஸ்.எஸ் தடை செய்யப்பட்டுள்ளது. ஆர். எஸ்.எஸ் மூன்று முறை தடை செய்யப்பட்ட போதும் அதிகபட்சம் இரண்டு ஆண்டுகள் என்ற அளவில் மட்டுமே தடை செய்யப்பட்டது. அகண்ட பாரதத்தில் இந்து இராஜ்யம் அமைப்பது அதன் நோக்கமாகும். அந்த நோக்கத்துடன் தான் குடியுரிமை திருத்தச் சட்டம் தற்போது நடைமுறைக்கு வந்துள்ளது. மேலும் மொழி வழி தேசிய இனங்களை மாநிலங்களை ஜன்பத மண்டலங்களாக பிரித்து இன அழிப்பு செய்வதாகும். அதன் ஒரு பகுதி தான் காஷ்மீரை மூன்றாக பிரித்ததும். தமிழ்நாட்டை மூன்றாக பிரிக்கும்

திட்டத்துடன் செயல்படுவதும் ஆகும். ஜனபதம் என்பது பார்ப்பனர்களை மேலாண்மையாகக் கொண்ட சாதி அமைப்பு ஆகும். இந்த நோக்கத்திற்காகவே ஒரே நாடு, ஒரே தேர்தல் என்ற முழக்கங்களை முன்வைக்கின்றனர்.

## காங்கிரசு கட்சி

காங்கிரஸ் கட்சி இந்திய விடுதலையை முதன்மையாக கொண்டு தொடங்கப்பட்ட கட்சி அல்ல. நிலவுடமை முதலாளிய ஏகாதிபத்திய அதிகார வர்க்கங்களின் நலனை முதன்மையாக கொண்டு தொடங்கப்பட்டதாகும். 2000 ஆண்டுகளுக்கு மேலாக ஆதிக்கம் செலுத்திய பார்ப்பனிய கொள்கை காங்கிரஸ் தலைவர்கள் இடத்திலும் இருந்தது. இன்றுவரை பார்ப்பனிய கண்ணோட்டத்தில் இருந்து காங்கிரஸ் விடுபடவே இல்லை. ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே. பி. ஆகியன முழு பார்ப்பனிய கட்சி என்றால் காங்கிரசு அரைப் பார்ப்பனிய கட்சியாகும்.

## திமுக, அதிமுக

பார்ப்பன எதிர்ப்பை முதன்மையாகக் கொண்டு (ஜஸ்டிஸ் கட்சி) நீதி கட்சி இயங்கியது. நீதி கட்சி 1916 ஆம் ஆண்டு தென்னிந்திய நல உரிமை சங்கம் என்ற பெயரில் தொடங்கப்பட்டது. 1920களில் நீதிக்கட்சி தேர்தலில் போட்டியிட்டது. 1938 ல் பெரியார் நீதி கட்சியின் தலைவர் ஆனார். 1935 ஆம் ஆண்டு தமிழ்நாடு விடுதலையை பெரியாரும் பல தமிழ் இயக்கங்களும் முன் வைத்தன. 1944இல் நீதி கட்சி மாநாட்டில் பெரியார் நீதி கட்சியை திராவிட கழகம் என மாற்றினார். சாதி பெயர்கள் ராவ் பகதூர், திவான் பகதூர் போன்ற பட்டங்கள் நீக்கப்பட்டன. பிறகு தேர்தலில் போட்டியிடுவதை முழுமையாகக் கைவிட்டார்.



1949ஆம் ஆண்டு திராவிடர் கழகத்திலிருந்து அண்ணா வெளியேறி திராவிட முன்னேற்ற கழகத்தை தொடங்கினார். 1938, 1965 ஆகிய ஆண்டுகளில் இந்தி எதிர்ப்பு போராட்டம் இரண்டு கட்டங்களாக நடைபெற்றன. 500க்கும் மேற்பட்டோர் இராணுவத்தாலும் காவல்துறையாலும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதில் பொள்ளாச்சியிலும் உடுமலைப்பேட்டையிலும் மற்றும் கோவை திருப்பூரிலும் நூற்றுக்கும் மேற்பட்டோர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இப்போராட்டத்தை பயன்படுத்தி 1967ல் திமுக பெரும் வெற்றியை அடைந்தது. தேர்தலில் வெற்றியை அண்ணா பெரியாருக்கு காணிக்கையாக்கினார். நேருவால் பிரிவினை தடைச் சட்டம் வந்தபோது 1962இல் திராவிட முன்னேற்ற கழகம் கட்சியை பாதுகாக்க திராவிட நாடு கோரிக்கை கைவிடப்பட்டது. பிறகு திமுகவின் கொள்கை “மாநில சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி” என சுருங்கி போனது. திமுகவின் தமிழ், தமிழர், உலகத் தமிழர் நலன் என்பதெல்லாம் மக்களை ஏமாற்ற பயன்படுத்தப்படும் உத்திகளே. இந்த ஆண்டு பத்தாம் வகுப்பு தேர்வில் கட்டாய தமிழ் பாடம் தேர்வு எழுதுவதில் இருந்து விலக்கு அளித்துள்ளது. ஈழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஒழித்து கட்டுவதில் காங்கிரஸ் வெளிப்படையாக செயல்பட்டது. திமுக மறைமுகமாக செயல்பட்டது. ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி.இன் பாசிசத்தை வீழ்த்துவதாக கூறும் இந்திய கூட்டணிக்கு அதன் தலைவர்களுக்கு அதற்கான எந்த செயல் திட்டமும் இல்லை என்பதுடன் இவர்களே பாசிச சட்டங்களை நடைமுறைப் படுத்துகின்றவர்களாக உள்ளனர். ஊபா சட்டத்தை காங்கிரஸ் கொண்டு வந்த போது திமுக அதிமுக அதனை ஆதரித்தன. அதில் கடுமையான திருத்தங்களை பி.ஜே.பி. கொண்டு வந்த போதும் தி.மு.க., அ.தி.மு.க. ஆகியன ஆதரித்த மாநில அதிகாரத்தை பறிக்கும் என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வு முகமையை தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் ஆதரித்தன. இவ்விரு கருப்பு சட்டங்களை பயன்படுத்தி நூற்றுக் கணக்கானோரை இவ்விரு அரசுகளுமே கைது செய்துள்ளது. இவர்களது பாசிச எதிர்ப்பு என்பது வெறும் நாடகமே.

தி.மு.க.வில் இருந்து பிரிந்த அ.தி.மு.க., தி.மு.க.விற்கு போட்டியான ஒரு கட்சியே தவிர கொள்கையளவில் பெரும் மாற்றமில்லை. அ.தி.மு.க.வை தொடங்கியதில் பார்ப்பனர்களும் காங்கிரசின் சதையாக செயல்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் முக்கிய பங்காற்றியது. தி.மு.க.வினர் பார்ப்பனிய மேலாதிக்கத்தை எதிர்ப்பார்கள் அதே நேரத்தில் பார்ப்பனியத்தின் இன்னொரு கூறான சாதியத்தை தூக்கிப் பிடிப்பார்கள். பி.ஜே.பி. சாதிவாத, மதவாத அமைப்பு என்றால் தி.மு.க சாதிவாத அமைப்பு ஆகும். அதிமுக உட்பட பிற கட்சிகள் இதற்கு விதிவிலக்கு அல்ல. இந்நிலையில் தமிழ்நாட்டின் வரலாற்றில் சாதியத்தையும் மதத்தையும் எதிர்க்கும் சமரசம் அற்ற கொள்கையாளர்களாக பெரியாரும் அம்பேத்கரும் திகழ்ந்தனர். அவர்களது அரசியல் வழியை விமர்சனத்துடன் முன்னெடுப்போம்.



## கம்யூனிஷ்டுகள்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) ஆகிய கட்சிகள் தேர்தல் பாதையை தங்களது வழியாக தேர்ந்தெடுத்துக் கொண்டன. மார்க்சிய-லெனினியக் குழுக்கள் தேர்தல் பாதையை பயன்படுத்த தொடங்கிவிட்டன. புரட்சியை முன்னெடுக்கப் போவதாகவும் கூறி வருகின்றன. மாவோயிஸ்டுகள் தேர்தலை புறக்கணிக்கின்றனர் என்ற போதிலும் பெரும்பான்மையான மார்க்சிய லெனினியக் குழுக்கள் இந்திய புரட்சி திட்டத்திலேயே செயல்படுகின்றன. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) ஆகியன தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளவில்லை. அதே நேரத்தில் பல்வேறு மார்க்சிய லெனினிய குழுக்கள் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டனவையாக உள்ளனவேத் தவிர அதனை முதன்மையாக கொண்டு செயல்படுகின்றனவாக இல்லை. தமிழக விடுதலைப் போராட்டம், காஷ்மீர் விடுதலைப் போராட்டம், வடகிழக்கு தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டம் ஆகியவற்றினை ஜனநாயகப் போராட்டம் என்ற அளவில் அதாவது தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் என்ற அளவில் ஆதரிக்கின்றனவாக மட்டுமே இருக்கின்றன.

தமிழ் தேசிய இறையாண்மை அமைப்பானது தமிழ்த் தேசிய இனத்தின் இறையாண்மையை/அரசுஅதிகாரத்தை மீட்கும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது. அந்த கண்ணோட்டத்தில் இருந்து இந்த தேர்தலை அணுகுகிறது. அதற்கான முழக்கத்தை முன் வைத்துள்ளது.

* இந்துத்துவ வெறிபிடித்த பி.ஜே.பி. மோடி பாசிச கூட்டணியைத் தோற்கடிப்போம்!
* தமிழ்த்தேச இறையாண்மையை முன்னெடுப்போம்!
* இடது சாரிகளையும், ஜனநாயக சக்திகளையும் ஒருங்கிணைப்போம்!
* பார்ப்பனியம், நிலவுடமையை, முதலாளியம், ஏகாதிபத்தியம் வீழ்த்துவோம்!
* புரட்சிகர திசை வழியை முன்னெடுப்போம்!



# கிரானைட் போராட்டம்

## மதுரையில் முளைத்த விடிவெள்ளி

- பாரி

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கொட்டாம்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த சேக்கிப்பட்டி, திருச்சுனை, அய்யாபட்டி ஆகிய வருவாய் கிராமங்களிலுள்ள சேக்கிப்பட்டி, ஓட்டக்கோவில்பட்டி, செக்கடிப்பட்டி ஆகிய மூன்று சிற்றூர்களில் வண்ணக்கல் கிரானைட் குவாரி அமைப்பதற்கான பொது ஏலம் மதுரை மாவட்ட ஆட்சியர் சங்கீதா அறிவித்தார். மேலே கண்ட மூன்று சிற்றூர்களில் அரசு புறம்போக்கு நிலங்களில் பல வண்ணக் கிரானைட்கல் குவாரிகள் 20 ஆண்டுகள் குத்தகை உரிமம் வழங்க இருப்பதாகவும் இதற்கான பொது ஏலம் 2023 அக்டோபர் 31 ஆம் நாள் நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் அக்டோபர் 11 ஆம் நாள் ஊடகங்கள் மூலம் அறிவித்தார். உடனே இதற்கு எதிராக சுற்று வட்டார பகுதி மக்கள் போராட்டத்தில் இறங்கினர்.

### போராட்டத்திற்கு வித்திட்ட சகாயம் குழு அறிக்கை

மதுரை மாவட்டம், மேலூரில் சட்டவிரோதமாக வெட்டி எடுக்கப்பட்ட கிரானைட் முறைகேட்டால் அரசுக்கு ரூ. 1 இலட்சத்து 11 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டது என மதுரை மாவட்ட ஆட்சியராக இருந்த சகாயம் அறிவித்தார். இது 1990 முதல் 2012 வரைக்குமான இழப்பின் ஒரு பகுதியாகும். இந்த முறைகேட்டில் மத்திய, மாநில அதிகாரிகள் முதல் அனைத்து துறைகளிலுள்ள கடைநிலை ஊழியர்கள் வரையிலும், அனைத்து ஆளும் மற்றும் எதிர்க் கட்சியினரும் ஈடுபட்டுள்ளனர். அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் வெட்டி எடுத்த கிரானைட் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதற்கு துறைமுக அதிகாரிகள், ஏனைய வங்கிகள் என மொத்த அரசுத் துறையும் இவர்களுக்கு துணையாக செயல்பட்டுள்ளது. ஒரே முகவரில் பல போலி நிறுவனங்களைப் பதிவு செய்துள்ளனர். வெட்டி எடுக்கப்பட்ட கல்லின் அளவைக் குறைத்துக் காட்ட சில உத்திகளைக் கையாண்டுள்ளனர். ஒரு உரிமத்தை பலமுறை பயன்படுத்துவது, லாரியின் ஒரே பதிவெண்ணை மீண்டும் மீண்டும் பதிவேட்டில் எழுதி கடத்தியுள்ளனர். கல்லின் அளவு, தரம் ஆகியவற்றை மறைத்துள்ளனர்.

வெளிநாடுகளில் விற்ற பணத்தை முழுதாக கொண்டுவராமல் அந்நியக் செலவாணியாக மாற்றி பதுக்கி வைத்துள்ளனர். திருவாதவூர், கீழத்தூர், கீழவளவு, சமர் குகைகள், கல்படுகைகள், தமிழ் பிராமிக் கல்வெட்டு எழுத்துக்கள் போன்றவை தொல்லியல் துறைக் கண்காணிப்பாளர் பலமுறை வேண்டுகோள் விடுத்தும் ஏலதாரர்கள் கண்டுகொள்ளவில்லை. கிரானைட் கற்களை எடுப்பதற்காக விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டுள்ளன. குளம், குட்டை, ஏரி, நீர்வரத்து, வாய்க்கால் போன்றவை நாசமாக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் வெடி மருந்து வைத்து தகர்க்கப்பட்டுள்ளன. ஏலம் எடுத்த இடத்தில் நிறைய கிரானைட் கல் கிடைக்க வேண்டும் என்பதற்காக அப்பாவிகளை நரபலி கொடுத்துள்ளனர். இவைகளை எல்லாம் சகாயம் அவர்கள் உயிரையும் துச்சமெனக் கருதி பல்வேறு கொலை மிரட்டல்களுக்கு இடையில் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவருடைய அறிக்கை 600 பக்கங்களைக் கொண்டது. இவ்வறிக்கையை 2015 நவம்பரில் அரசுக்கு அளித்தார். அவரது அறிக்கையை அரசு இதுவரை வெளியிடவில்லை

> *“ஏலம் எடுத்த இடத்தில் நிறைய கிரானைட் கல் கிடைக்க வேண்டும் என்பதற்காக அப்பாவிகளை நரபலி கொடுத்துள்ளனர்.”*

அவரது பரிந்துரைகள் மூடி மறைக்கப்பட்டுள்ளன என்பதுடன் அதற்கான 200 வழக்குகள் முடியவில்லை.

இந்நிலையில் தற்போது ஏல அறிவிப்பு விடப்பட்டுள்ள மூன்று கிராமங்களிலுள்ள பனிமலைக்குன்று, கோழிமுட்டைப் பாறை, வண்ணாம் பாறை ஆகிய அமைவிடத்திற்கும் கடந்த காலங்களில் வெட்டி சீரழிக்கப்பட்ட மேலூர் பகுதியிலுள்ள கிரானைட் குவாரிக்கும் இடைப்பட்ட தூரம் வெறும் 10 கி.மீ. மட்டுமே என்பதால் கிரானைட் குவாரியால் ஏற்படப் போகும் சீரழிவுகளைக் குறித்து மக்கள் நன்கு அறிந்து உள்ளனர். மேலும் சகயாம் குழு அறிக்கையின் சாரத்தை அறிந்துள்ளனர். இப்பகுதியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆர்வலர்களும்; மக்களிடையே சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளனர். இவையெல்லாம் சேர்ந்து மக்களைப் போராட்ட களத்திற்கு உடனே கொண்டு வந்துள்ளது.



## வெற்றிக் கனியைப் பறித்த மக்கள்

மதுரை மாவட்ட ஆட்சியர் பொது ஏல அறிவிப்பை அக்டோபர் 11 ஆம் நாள் அறிவித்தவுடனே அதற்கு எதிராக மக்கள் அணிதிரண்டனர். பறம்பு மலைப் பாதுகாப்பு இயக்கம், தமிழ்நாடு சுற்றுச் சூழல் பாதுகாப்பு இயக்கம், சட்ட விரோத கல்குவாரி எதிர்ப்பு இயக்கம் மற்றும் தமிழ்த் தேசிய, புரட்சிகர, ஜனநாயக அமைப்புகள், இவர்களுடன் உள்;ர் அளவிலான ஆளும், எதிர் கட்சியினர் அனைவரும் இவர்களுக்கு துணை நின்றனர். கிரானைட் ஒப்பந்தத்தை ரத்து செய்யக் கோரி சுற்றுப்புற கிராம மக்கள் அக்டோபர் 16 ஆம் நாள் மதுரை மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பம் செய்தனர். உரிய பதில் கிடைக்கவில்லை. எனவே அக்டோபர் 26 ஆம் நாள் தொடர் காத்திருப்பு போராட்டத்தை சேக்கிப்பட்டி மந்தை வெளியில் 20க்கும் மேற்பட்ட கிராமத்தைச் சேர்ந்த மக்கள் தொடங்கினர். 26,27 ஆகிய இரண்டு நாட்களில் நடைபெற்ற போராட்டத்தைக் கண்டு அஞ்சிய மாவட்ட ஆட்சியர் நிர்வாக நலன் கருதி ஏலத்தை நவம்பர் 30 இல் ஒத்தி வைத்தார். இதன் காரணமாக போராட்டமும் ஒத்திவைக்கப்பட்டது.

இதற்கிடையில் மக்களது போராட்டத்தை ஒருங்கிணைத்து வழி நடத்திய கம்பூர் செல்வராசு மீது மேலூர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இவர் பொது அமைதிக்கும் ஒற்றுமைக்கும் அடிக்கடி பாதிப்பு ஏற்படுத்துகிறார் என இரண்டு காரணங்களைக் கூறுகின்றனர். அவை அப்பகுதியிலிருந்து அரசு மதுக்கடையை மக்களது போராட்டத்தின் மூலம் ஒழித்துக்கட்டியது. பிறப்பு சான்றிதழ் பெற இலஞ்சத்திற்காக பெண்களை அலையவிட்டதற்கு எதிராகப் போராடியது. இப்படி மக்களைத் திரட்டி போராடிய செல்வராசுவை பயமுறுத்த ரவுடி என சித்தரித்து குற்றப் பிரிவு எண் 110 இன் கீழ் வழக்கு தொடுக்கின்றனர். இதற்கு எதிராக சட்டப் போராட்டமும், மக்களிடையிலான உணர்வூட்டல் போராட்டமும் நடத்தி வழக்கிலிருந்து செல்வராசு விடுவிக்கப்படுகிறார்.

நவம்பர் 29ம் நாள் பரம்புமலை பாதுகாப்பு இயக்க கர்ணன், செல்வராசு உள்ளிட்ட தோழர்களும், இந்திய குடியரசுக் கட்சி மெய்யப்பன் அவர்களது ஒருங்கிணைப்பில் செய்தியாளர் சந்திப்பு மதுரையில் நடந்தது. இதில் சுற்றுச்சூழல் ஆர்வலர் முகிலன் கலந்துக்கொண்டு மூன்று கிராமங்களில் கல்குவாரிகள் எப்படி அரசு விதிமுறைகளுக்கு எதிராக அமைக்கப்பட இருக்கிறது என விளக்கினார். அடுத்து மாவட்ட ஆட்சியரால் ஒத்தி வைக்கப்பட்ட கிரானைட் குவாரி நவம்பர் 30 இல் பொது ஏலம் விடப்பட இருந்த நிலையில் மூன்று கிராமத்தையும் சுற்றியுள்ள மக்கள் நவம்பர் 27 இல் காத்திருப்பு போராட்டத்தை ஓட்டக்கோவில் பட்டியில் மீண்டும் தொடங்கினர்.

இப்போராட்டத்தை சிதைக்க உளவுத்துறையும், அதிகார வர்க்கமும் பல்வேறு வழியில் முயற்சித்தனர். இளைஞர்களை தீவிரவாதிகள் பட்டியலில் கொண்டுவருவோம் என மிரட்டினர். இதையும் மீறி மக்கள் ஒற்றுமையுடன் உறுதியாக போராடினர். போராட்டத்தில் கலந்து கொண்ட பெண்களின் உரை மக்களது அதிகாரத்தை படைக்கும் திசை வழியில் தன்னெழுச்சியாக இருந்தது. இதனைக் கண்டு அஞ்சிய அதிகார வர்க்கம் கிரானைட் பொது ஏலத்தை நிர்வாகக் காரணங்களுக்காக ரத்து செய்வதாக அறிவித்தனர். இதனை அறிந்த மக்கள் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவினர். வெற்றி முழக்கமிட்டு வெடிவெடித்து ஆர்ப்பரித்து இனிப்பு வழங்கினர். அன்றிரவு முழுவதும் ஓட்டக்கோவில் பட்டி விழாக்கோலம் பூண்டது. இதில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பங்கேற்றனர்.

## கொள்கைகளற்ற கட்சிகள்

தமிழ்நாடு முழுவதும் 1,860 கிரானைட் குவாரிகள் இருந்தும் 96 மட்டுமே இயங்கிக்கொண்டுள்ளன. இதில் பட்டா நிலங்களில் 45, அரசு புறம்போக்கு நிலங்களில் 56 என கிரானைட் உரிமையாளர் சங்கம் கூறுகிறது. மதுரை மாவட்டத்தில் மட்டும் 180 குவாரிகள் சகாயம் குழு அறிக்கைக்குப் பிறகு இயங்கவில்லை. குவாரிகள் பல வகைப்படும். அவை மணல் குவாரிகள், ஜல்லி குவாரிகள், கிராவல் குவாரிகள், கிரானைட் குவாரிகள் என இப்படி பல வகைக் குவாரிகள் உள்ளன. இதில் கோடிக் கணக்கில் பணம் புரளும் இடமாக கிரானைட் குவாரிகள் உள்ளன. கிரானைட் குவாரிகள் மலையை உடைத்து எடுக்கப்படுகிறது. மதுரை மாவட்ட குவாரிகள் 250 கோடி ஆண்டுகள் பழமையானது. இங்கு பல்லுயிர்கள் வாழ்கின்றன. உலகில் இதன் சந்தை மதிப்பு மிக மிக அதிகம்.




தமிழ்நாட்டில் குவாரிக்கு எதிரானப் போராட்டம் பெரும்பாலும் சுவற்றுச்சூழல் ஆர்வலர்களால் சட்ட வடிவில் மட்டுமே கடந்த காலங்களில் நடைபெற்றது. மக்களிடம் சுற்றுச்சூழல் பற்றிய விழிப்பின்மையால் சுற்றுச்சூழல் ஆர்வலர்களை அரசு ஒருபக்கம் ஒடுக்கியது. மறுபுறம் குவாரி உரிமையாளர்களின் அடியாள் படை அவர்களைக் கொன்றொழித்தது. இதற்கு சில நேர்மையான அதிகாரிகளும் பலியானர்கள், தற்போது நடைபெற்ற போராட்டம் என்பது குவாரிகள் சட்டப்படியாக அமைக்க வாய்ப்பிருந்தும் அது எங்களுக்குத் தேவையில்லை, எங்களது வாழ்வாதாரத்தை, சுற்றுச்சூழலை அது கெடுக்கிறது என மக்கள் ஒரு புதிய பரிமாணத்தில் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். இது வரவேற்க்கத்தது. ஏனெனில் இது போன்ற குவாரிகள் அமைப்பதால் எதிர்காலத்தில் எற்படப்போகும் பேரழிவுகள் குறித்து யாருக்கும் ஏதும் தெரியாது. தற்போது வட தமிழ்நாட்டில் சென்னை, தென் தமிழ்நாட்டில் நெல்லை, குமரி, தென்காசி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்கள் நீரில் மிதந்தன.

இதுபோன்ற குவாரிகள் அமைத்த இடங்களில் பூமியின் நீர் மட்டம் 1000 அடிகளுக்கு கீழே சென்றுவிட்டதாக கோவை, திருப்பூர் பகுதி சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர். தமிழ்நாட்டின் கனிம, கரிம வளங்களையும், காடு, கடல் ஆகிய வளங்களையும், நீரையும் கொள்ளையிடுவதற்கு பன்னாட்டு, உள்நாட்டு கார்பரேட் முதலாளிகள் திட்டம் போட்டு செயல்படுகின்றனர். இவர்களுக்கு அடியாள் படையாக தேர்தல் கட்சிகளும், அதிகார வர்க்கமும் செயல்படுகின்றன. தமிழ் நாட்டை ஆண்ட, ஆண்டு கொண்டிருக்கும் கட்சிகளுக்கு அவர்களுடன் கூட்டணி வைத்துள்ள துண்டு துக்காணி கட்சிகளுக்கு சுற்றுச்சூழலைப் பாதுகாக்க எந்தக் கொள்கையும் இல்லை. எனவே மக்கள் தான் இவர்களுக்கு தங்களது போராட்டம் மூலம் பாடம் புகட்ட வேண்டும்.

## மக்கள் அதிகாரங்களைப் படைப்போம்

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவரது ஆட்சி காலத்தில் "விவசாயிகள் விவசாயத்திலிருந்து வெளியேற வேண்டும்" என்று கூறினார். ஆம். 1991க்குப் பிறகு தாராளமயம், தனியார்மயம், உலகமயம் என்ற புதிய காலனியக் கொள்கையை இந்திய அரசும், அதிலுள்ள தமிழ்நாட்டு அரசும் பின்பற்றுகின்றன.

"ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருத்தன் போட்டான் வெள்ளரிக்காய்
காசுக்கு ரெண்டு விற்கச் சொல்லி
கடுதாசி போட்டான் வெள்ளக் காரன்"

இப்பாடல் 1947க்கு முன்பு வெள்ளைக் காலனி ஆதிக்கத்திற்கு எதிராகக் தமிழ்நாட்டில் பாடிய பாடல். அன்று வெள்ளைக்காரன் மட்டும் நமது வாழ்வை கட்டுப்படுத்தினான். இன்று பன்னாட்டு, உள்நாட்டு கார்பரேட் முதலாளிகள் நமது அரசின் மூலமாக நம்மைக் கட்டுப் படுத்துகின்றனர்.



தமிழ் நாட்டின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க தொடர் போராட்டங்கள் பல்வேறு வடிவில் நடைபெற்று வருகின்றன. அவை ஸ்டர்லைட் எதிர்ப்புப் போராட்டம் கல்பாக்கம், கூடங்குளம் அணுஉலை எதிர்ப்புப் போராட்டம், மீத்தேன், ஹைட்ரோகார்பன் திட்டங்களுக்கு எதிரான போராட்டம், சிப்காட்டிற்கு எதிரான போராட்டம், நியூட்ரினோவிற்கு எதிரானப் போராட்டம் என்றவாறு பட்டியல் நீள்கிறது. இத்துடன் கடலிலிருந்து விரட்டி அடிக்கப்படும் மீனவர்கள், காடுகளிலிருந்து விரட்டியடிக்கப்படும் மலைவாழ் மக்கள், கழனியிலிருந்து விரட்டியடிக்கப்படும் விவசாயிகள் சில்லரை வணிகத்திலிருந்து விரட்டியடிக்கப்படும் வியபாரிகள், தொழிற்சாலைகளிலிருந்து விரட்டியடிக்கப்படும்; தொழிலாளிகள் முதலாளிகள் என இதுவும் பட்டியல் நீள்கிறது. ஆக, தமிழ்நாடு போராட்டக்களமாக மாறியிருக்கிறது. இப்போராட்டங்கள் இந்திய அரசுக்கு எதிராகவோ அல்லது தமிழ்நாடு அரசுக்கு எதிராகவோ அமைந்துள்ளன. ஆட்சியாளர்களைப் பொறுத்த அளவில் மத்தியில் உள்ளவர்கள் மாநிலத்தைக் காட்டியும் மாநிலத்தில் உள்ளவர்கள் மத்திய அரசைக் காட்டியும் தப்பித்துக்கொள்கின்றனர். இதே வித்தையை ஆளும், எதிர்க் கட்சிகளும் அவர்களது கூட்டணிக் கட்சிகளும் செய்கின்றன இந்த குழப்ப நிலையிலிருந்து விடுபடவேண்டும். நமக்கான அதிகார மையங்களை அடையாளம் காண வேண்டும்.

தமிழ்நாட்டின் அரசியல் அரங்கில் ஒவ்வொரு அரசியல் அமைப்புகளும் பல்வேறு குறிக்கோளுடன் இயங்குவதைக் காணலாம். அவற்றினை புரிந்துகொள்ள எளியமுறையில் கீழ்காணும் முறையில் வகைப்படுத்துவோம். ஒன்று இந்திய தேசிய அரசியல் போக்கு. இரண்டு தமிழ்த் தேசிய அரசியல் போக்கு. இந்திய தேசிய அரசியல் போக்கில் ஒற்றை இந்திய தேசிய போக்கு, கூட்டாட்சிப் போக்குகள் உள்ளன. தமிழ்த் தேசிய அரசியல் போக்கில் ஆரியதிராவிட எதிர்ப்பு, தமிழர் இறையாண்மை அல்லது அதிகாரம், சாதியம் போன்ற போக்குகள் செயல்படுகின்றன. இவைகள் குறிப்பிட்ட வர்க்க அல்லது குழுக்களின் நலனைக் கொண்டிருக்கின்றன.

இந்திய தேசிய அரசியல் போக்கில் கூட்டாட்சியை மறுக்கக் கூடிய காங்கிரசு, பிஜேபி, இடதுவலது கம்யூனிஸ்டுகள் உள்ளன. இவைகள் சாரத்தில் இந்திய பெருமுதலாளிய, பார்ப்பனிய அதிகார வர்க்க நலனைக் கொண்டிருக்கின்றன. "மாநில சுய ஆட்சி,

மத்தியில் கூட்டாட்சி" என்ற கோரிக்கையை எழுப்பும் திமுக இக்கோரிக்கைக்காக உறுதியாகப் போராடுவதற்குப் பதில் இந்திய ஆளும் வர்க்கத்துடன் பதவி பேரம் பேசுவதற்காகவும் மொழி உணர்வாளர்களை ஏமாற்றவும் இதனை பயன்படுத்துகின்றன. ஆரியதிராவிட எதிர்ப்பு தமிழ்த் தேசியம் பேசும் நாம் தமிழர் கட்சி தமிழர்களது அதிகாரத்தை நிறுவுவதற்கான திட்டம் இல்லாது உள்ளன. மேலும் அரசாங்கம் (**Governmen**) அரசு (**State**) குறித்து எந்தப் பார்வையும் இல்லாமல் தமிழர்கள் ஆட்சிக்கு வந்தால் (தான் ஆட்சிக்கு வந்தால்) எல்லா சிக்கலும் தீர்ந்துவிடும் என மக்களை ஏமாற்றுகி;ன்றனர். இதே நிலையில் தான் சில தமிழ்த் தேசிய குழுக்கள் செயல்படுகின்றனர். சாதிய அமைப்புகளைப் பொறுத்த அளவில் இந்தியத்தை ஏற்றுக் கொள்ளக் கூடிய அமைப்புகளாகவோ அல்லது தமிழ்த் தேசியத்தை ஏற்றுக் கொள்ளக் கூடிய அமைப்புகளாகவோ உள்ளன. இவைகள் அந்தந்த சாதிகளின் உடமை வர்க்கத்தின் நலனையும், அவர்களுக்கு அடியாள் படையாக செயல்படுவதற்கு மேல் ஒன்றும் செய்ய இயலாது. ஆக அரசியல் அதிகாரம் இரண்டு வழியில் மட்டுமே படைக்க இயலும். ஒன்று. இந்திய தேசிய அரசியல் வழியில். இது ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளது. மற்றொன்று. தமிழ்த் தேசிய அரசியல் வழியில். அதற்கானப் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இதில் மக்கள் தங்களது அதிகாரத்தை எவ்வாறு நிறுவுவது?

ஒவ்வொரு நாட்டின் அரசியல் அமைப்பும் வெவ்வேறு முறையில் கட்டி அமைக்கப்பட்டுள்ளது. மேற்கு ஐரோப்பா நாடுகளில் கட்டப்பட்ட அரசியல் அமைப்பு என்பது பெரும் நிலவுடமையை ஒழித்து முதலாளிய வளர்ச்சிக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டது. இது தனியார் சொத்துடைமையை பாதுகாக்கும் நோக்கம் கொண்டதாகும். ரஷ்யா, சீனா, வியட்நாம் நாடுகளில் மிகப் பெருவாரியான விவசாயிகள், தொழிலாளர்கள் இதர உழைக்கும் மக்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டது. பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட அமெரிக்கா, கூட்டரசு என்ற வகையில் ஜனநாயகத் தன்மை கொண்டது. இது 50 மாநிலங்களையும், ஒரு கூட்டமைப்பு மாவட்டத்தையும், ஐந்து முதன்மையான ஒன்றினைக்கப்படாத நிலப்பரப்புகளையும், ஒன்பது சிறிய வெளிப்புறத் தீவுகளையும் உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு மாநிலங்களும் தனித்தனி அரசமைப்புகளுடன் செயல்படுகின்றன. இந்தியாவில் மாநிலங்களவை (ராஜ்யசபா) இருப்பது போல அமெரிக்காவில் செனட் உள்ளது. இந்தியாவிலுள்ள மாநிலங்களவை என்பது பெரும் தேசிய இனவெறிக்கு ஏற்ப கட்டமைக்கப்பட்டது. ஆனால் அமெரிக்கா செனட் என்பது எண்ணிக்கையில் சிறிய, பெரிய தேசிய இனங்கள் எவ்வளவு இருந்தாலும் ஒவ்வொரு மாநிலங்களுக்கும் இருவர் மட்டுமே இடம் பெறுவர். அவ்விருவர் மட்டுமே அம்மாநில சிக்கலை தீர்க்கும் அதிகாரம் பெற்று இருப்பர். அந்த வகையில் 50 மாநிலங்களுக்கும் இருவர் வீதம் 100 செனட் உறுப்பினர்கள் அமெரிக்காவில் உள்ளனர். ஆனால் இந்திய மாநிலங்களவை என்பது தேசிய இனங்களின் விருப்பங்களை நிறைவு செய்வது இல்லை. இது போலியானது. இலங்கை போன்ற நாடுகளில் கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகளின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம் பெறுவர். ஆக இப்படித்தான் ஒவ்வொரு நாட்டின் ஆட்சிமுறையும் உள்ளன.

"பாராளுமன்ற ஜனநாயகம் போலியானது, சோவியத் ஜனநாயகம் மக்களுக்கானது" என்று மார்க்சியலெனினிய அமைப்புகள் 1992க்கு முன்னாள் பரப்புரை செய்தன. ரஷ்யப் புரட்சிக்குத் தலைமை தாங்கிய லெனின் பெரும்பான்மை மக்களுக்கு அதிகாரமுள்ள அரசியல் அமைப்பாக இதனை பன்னாட்டு தொழிலாளர் வர்க்கம் பரப்புரை செய்யவேண்டும் என பரிந்துரை செய்தார். தமிழ் நாட்டிலுள்ள இடது, வலது கம்யூனிஸ்டுகள் தொழிலாளர் விவசாயிகளிடம் இதனை கொண்டு செல்லாமல் மூடி மறைத்தனர், இன்று வரை மூடி மறைக்கின்றனர். சோவியத் ஜனநாயகம் என்பது வர்க்க அடிப்படையிலான பிரதிநிதிகளைக் கொண்டது. வர்க்கப் பிரதிநிதிகள் அந்தந்த வர்க்கங்களின் எண்ணிக்கைக்கு (அளவுக்கு) ஏற்ப இடம் பெறுவர். அவர்களை மக்கள் தேர்ந்தெடுக்கவும் எப்போது வேண்டுமானலும் திருப்பி அழைக்கவும் அதிகாரம் பெற்று இருப்பார். அரசாங்கம் (நாடாளுமன்றம், சட்ட மன்றம் போன்ற) மட்டுமல்ல, அரசும் (நீதிமன்றம்,

மாவட்ட அலுவலகம் போன்ற அதிகார வர்க்க அமைப்புகள்) மக்களது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும். இவ்வாறு சட்டமன்றம், நாடாளுமன்றம் போன்ற சட்டம் போடும் அமைப்பும், அதனை நடைமுறைப் படுத்தும் அதிகார வர்க்க அமைப்பும் மக்களால் ஜனநாயகப் படுத்தப்பட்டிருக்கும். சட்டம் போடும் அமைப்பு மட்டுமல்ல. அதிகார வர்க்க அமைப்பும் மக்களுக்குப் பதில் சொல்ல கடமைப்பட்டதாகும். இந்த அமைப்பு முறையானது ஊராட்சியிலிருந்து உயர் மட்டம் வரை இவ்வாறுதான் அமைக்கப்பட்டிருக்கும். இந்த அரசியல் அமைப்பு முறை மூலம் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் இதர உழைக்கும் பிரிவியினர் தங்களது அதிகாரத்தை சுரண்டும் முதலாளி வர்க்கத்தின் மீது செலுத்துவர்.

இந்தியாவில் அரசியல் அமைப்பை உருவாக்கியதில் முக்கிய பங்காற்றிய வர்க்கங்கள் பார்ப்பன பனியா முதலாளிகள், பெரும் நில உடைமையாளர்கள், (மன்னர்கள்) அதிகார வர்க்க அறிவாளிகளே. தாழ்த்தப்பட்ட சமூகத்திலிருந்து வந்த அம்பேத்கர் இந்தியாவில் அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கியதில் முதன்மையான பாத்திரம் வகித்த போது அவர் ஒரு முதலாளிய ஜனநாயகவாதியாகவே திகழ்ந்தார். கம்யூனிஸ்டு ஆட்சிமுறையை சர்வாதிகார ஆட்சிமுறையாக புரிந்து கொண்டிருந்தார். இந்தியாவின் அரசியல் நிர்ணய அவையின் தலைவராக அம்பேத்கர் தேர்ந்தெடுப்பதற்கு முன்பே இந்திய ஆளும் வர்க்கங்கள் இந்திய அரசியல் அமைப்பின் வரைவு அறிக்கையை முன் வைத்திருந்தனர். அம்பேத்கர் அதனை ஆளும் வர்க்கம் அனுமதித்த அளவுக்கு ஏற்ப ஜனநாயகப் படுத்தினார். அம்பேத்கரைப் பொறுத்த அளவில் இந்தியாவின் அதிகார வர்க்கத்தின் பண்புகளை சரியாக புரிந்து கொண்டவராக இல்லை. அதனால்தான் தனது வாழ்வின் இறுதியில் “இந்தியாவின் அரசியல் சட்டம் யாருக்கும் பயனிளிக்கப் போவதில்லை, அதனை கொளுத்தவேண்டுமானால் முதல் நபராக நானிருப்பேன்” என்றார். எனவே, இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டம் பெரும் முதலாளிகளின் நலனுக்கானதே தவிர உழைக்கும் மக்களுக்கானது அல்ல.



தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து தேசிய இனங்களிலும் உள்ள சட்டமன்றம் என்பது ஒரு சட்டத்தை இயற்றவும், அதனை நடைமுறைப்படுத்தவும் அதிகாரமில்லா கங்காணி மன்றமே என்பதை ஆளுநர் ஆர்.என். இரவியின் மூலம் தமிழக மக்கள் நன்கு உணர்ந்து உள்ளனர். இதில் யார் ஆட்சி வந்தாலும் டெல்லிக்கு கங்காணி வேலை செய்ததாக வேண்டும். முடியாது என்றால் அந்த ஆட்சி 356 சட்டப் பிரிவைக் காட்டி கலைக்கப்படும். எனவே யார் ஆட்சி வேண்டும் என்பது முக்கியம் அல்ல. தமிழ்நாடு முற்றதிகாரம் பெறவேண்டும் என்பதே முக்கியம். அதிகாரம் பெற்ற தமிழ்நாட்டில் எப்படி அரசியல் அமைப்பு இருக்க வேண்டும் என்பது அடுத்ததாகும்.

தமிழ்த் தேச இறையாண்மைஅமைப்பைப் பொறுத்த அளவில் விவசாயிகள், தொழிலாளர்கள், பெண்கள், மாணவர்கள், நடுத்தர வர்க்கங்கள் ஆகியோருக்கு அதிகாரமுள்ள சோவியத் வடிவிலான ஆட்சிமுறையை முன் வைக்கிறது. அது மட்டுமே பெரும்பான்மை உழைக்கும் மக்களுக்கு அதிகாரமுள்ள ஆட்சிமுறையாகும். அது மட்டுமே அரசியல் வாதிகளின் முறைகேடுகளுக்கு மட்டுமல்ல, அதிகார வர்க்கங்களின் முறைகேடுகளுக்கும் முடிவு கட்டும். அத்திசை வழியில் மதுரை கிரானைட் கல்குவாரிக்கு எதிரானப் போராட்டம் செல்லட்டும்.

# அமைதி எப்போதும் வருகிறது

- கவிதை சமினா சலிம்
தமிழில் : நிழல்வண்ணன்

விழிகளின் வழி கசிகிறது நம்பிக்கையின்மை
இதயத்திலிருந்து  கசிகிறது குருதி வேதனையால்
ஊர்ந்துவருகிறது தனிமை அமைதியும் உடன் வருகிறது

மங்கி மறைகிறது கடந்தகாலம்
மங்கலாகத் தெரிகிறது நிகழ்காலம்
வெடிப்புக்கள் வழியே பார்வையை வீசிச் செல்கிறது எதிர்காலம்

தானே விலகுகிறது மர்மம்
அனைத்து மோசடிகளையும் உண்மை வெளிப்படுத்துகிறது
மோதல் தளர்கிறது உடன் வருகிறது அமைதி

புயல் ஓய்கிறது விண்ணில் வானவில் ஒளிர்கிறது
தென்றல் ஆரவாரத்தை அடக்குகிறது
உடன் வருகிறது அமைதி

கோபம்அகலுகிறது நெஞ்சிலிருந்து
மன்னிப்புக்கான அறைகூவல் வெளிவருகிறது
இதயம் தணிகிறது உடன் வருகிறது அமைதி

மனம், உடல், ஆன்மா எங்கும் வலி நிறைந்துள்ளது
சண்டையிடும் மனஉறுதி தளர்கிறது
உடன் வருகிறது அமைதி

வெறுப்பு எங்கும் ஆட்சி செய்கிறது
பிசாசு தன் விளையாட்டைத் தம்பட்டம் அடித்துக் கொள்கிறது
தேவதைகள் தோற்பதில்லை
தற்காலிக ஓய்வைக் கொண்டுவருகின்றன
உடன் வருகிறது அமைதி

எனது இரத்தக்குழாய்களை உறையச் செய்கிறது குளிர்
கரம் ஒன்று நீள்கிறது நெருக்கமாகப் பற்றிக்கொள்கிறது என்னை
ஆற்றுப்படுத்துகிறது உடன் வருகிறது அமைதி

அதிகரிக்கிறது கொந்தளிப்பு சோர்வடைகிறது எனது மனம்
பொறுமையுடன் செவிமடுக்கிறது அக்கறைகொண்ட ஒரு குரல்
உடன் வருகிறது அமைதி

எனது இதயத்தைப் பிளக்கிறது வேதனை
இளம் செம்பழுப்பு நிற விழிகள் வேதனையைத் தணிக்கின்றன
காயத்தை ஆற்றுகின்றன உடன் வருகிறது அமைதி

வீணென்று தெரிகிறது வாழ்க்கை, வாழும் ஆசை அகல்கிறது
மென்குரல் ஒன்று என்னை வேண்டுகிறது
உடன் வருகிறது அமைதி

தேய்கிறது பகல் வானிலிருந்து இறங்குகிறது இருள்
புதிய விடியல் பிறக்கிறது
உடன் வருகிறது அமைதி

எப்போதும் வருகிறது அமைதி, அது ஒருபோதும் தவறிழைப்பதோ
காட்டிக்கொடுப்பதோ இல்லை
அது ஒருபோதும் தோற்பதும் இல்லை கைவிடுவதும் இல்லை
அமைதி எப்போதும் வருகிறது.

# பாசிச எதிப்பு மக்கள் முன்னணி

## பொதுக்குழு கூட்டம்



2024 பிப்ரவரி 25 இன்று பாசிச எதிப்பு மக்கள் முன்னணியின் பொதுக்குழு கூட்டம் யுசிபிஐ சென்னை அலுவலகத்தில் நடைபெற்றது. காலை 10.30 மணிக்குதொடங்கி மாலை 6.00 மணிக்கு நிறைவடைந்தது. தோழர் பாலன் கூட்டத்தை வழி நடத்தினார். தோழர் தியாகு நாடாளுமன்ற தேர்தல் குறித்த அறிக்கையை முன் மொழிந்து அதன் மீது விவாதம் நடந்தது. பிறகு கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. ஆர்.எஸ்.எஸ், பிஜேபி பாசிச மோடிக் கும்பலைத் தோற்கடிப்போம்.
2. இடது ஜனநாயக சக்திகளை வலுபடுத்துவோம்.

கூட்டத்தின் தொடக்கத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர், பாசிச எதிர்ப்பு மக்கள் முன்னணியில் இடம் பெற்ற தோழர் அருண்மொழி அவர்களின் மறைவிற்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

# வந்தாரை

சிறுகதை

அ.கரீம்

பேயடித்தமுகம் போல் ரத்தினபுரிவீதிகள் முகம் தொங்கிபோய் வெறிச்சோடிக் கிடந்தது. தெருவில் நடமாடும் ஒன்றுரெண்டு பேரும் எதிரெதிரே வந்தாலும் நின்று பேசாமல் கடந்துபோயினர். சலீம் கடையின்முன்பு பொருட்கள் சிதறிக் கிடந்தது. கடைக்குள் வைத்து யாரோ சமையல் செய்ததுபோல் புகை படர்ந்து கருப்பப்பி இருந்தது. நெருப்பில் கருகிய அரிசியைத் தின்று வயிறு வீங்கி கடையின்முன்பு செத்துகிடந்த மூன்று ஆடுகளை மாநகராட்சி ஊழியர்கள் வந்து எடுப்பார்கள் என பார்த்துப்பார்த்து கடைசிவரை யாரும் வராததால் நாத்தம் தாங்காமல் சலீம் கடை எதிரேயிருந்த நாகராஜூம் அவனது நண்பர்களும் சாக்குப்பையில் திணித்து ஏரிமேட்டில் வீசிவந்தார்கள். சலீம் எங்கு ஓடிப்போனான் என்று யாருக்கும் தெரியவில்லை. அநேகமாய் அவன் சொந்த ஊருக்கே “போய்க்கோலினடா மயிரு நீங்களும் நீங்களுட நாடும்” என்று அவன் மொழியில் சபித்தபடியே கேரளா போயிருப்பான். இனிமேல் இடியே விழுந்தாலும் இந்த பக்கம் தலை வைத்து படுக்க மாட்டான்.



தினமும் சலீம் கடைவாசலை கூட்டிப்பெருக்கும் சொர்ணம்மாள் சலீம் வந்துவிட்டானா என்று எட்டிப்பார்க்க வந்தாள், கடையின்முன்பு அவன் தினமும்போடும் நொறுக்குத் தீனியைத் தின்று பழகிய தெருநாய் மட்டும் படுத்திருந்தது. சொர்ணம்மாள் சுருங்கிய முகம் குள்ளமான தோற்றம் நரைத்த முடியுடன் தளர்ந்துபோய் இருந்தாள். அவன் வரவில்லை என்பதற்கு அடையாளமாய் சிதறியபொருட்கள் அய்ந்தாம் நாளும் அப்பிடியே கிடந்தது. மனசு தாங்காமல் எடுத்து ஒதுங்க வைக்கலாம் என்று நேற்று எடுக்கப்போனவளை அவர்கள் வந்து “இது வேண்டாத வேல எடத்தக் காலி பண்ணு” என்று நேற்றே மிரட்டினார்கள். அடி வாங்கிய பயம் இன்னும் அவளுக்கு இருந்தது. முன்பைப்போல் யாரிடமும் துணிந்து சண்டைபோட முடியாத உடல்வலு அவளை வெட்கப்பட வைத்தது. கவர்மெண்ட் ஆஸ்பத்திரி முன்பு இட்டிலிகடை போடும் அந்நாளில் சொர்ணம்மாவை யாரும் ஏமாற்றமுடியாது ஏறிவிட்டு வந்து விடுவாள், ஆனால் தற்போது வலு அனைத்தும் இழந்த சக்கையாய் இருந்தாள்.

கலவரம் முடிந்து அய்ந்து நாட்கள் ஆகியிருந்திருந்தது. சலீம் கடை எதிரேயிருந்த சிக்கந்தர் வீட்டில் பெரிய பூட்டோடு தாழ் தொங்கியது. துருதுருவென்று ஓடிகொண்டிருக்கும் அமீரின் சத்தமில்லாமல் அந்த வீடு சொர்ணம்மாவுக்கு என்னமோபோல் இருந்தது.

பாவமறியாத சலிமை நினைத்து நெஞ்சு மறுவியது. “எப்பிடியாப்பட்ட புள்ள அது யாரோட

வம்பு தும்புக்கும் போகாத புள்ளைய இப்படி முடுக்கிட்டாங்களே, அவுனுங்க புள்ளகுட்டி உருப்புடுமா நாசமத்துப் போனவங்கே" முனுமுனுத்தபடியே சலீம் கடை எதிரே இருந்த புங்கமரத்தடியில் சொர்ணம்மா உட்கார்ந்தாள், சலீம் கடை பார்க்கப்பார்க்க அவள் வயிறு பற்றியெறிந்தது. அந்த கடையைப் பெரிதாக்க சலீம் பட்ட துன்பத்தை எல்லாம் அருகில் இருந்து பார்த்தவள் என்பதால் அவளுக்குக் கூடுதல் வலி இருந்தது. பால்பாக்கெட் போடும் முருகேஷ் அவனுக்கு வரவேண்டிய நூறுபாய் கிடைக்காமல் போய்விடுமோ என்று இன்றும் வந்து எட்டிப்பார்த்தான் "என்ன கண்ணு வேணும்?" என்று சொர்ணம்மாள் கேட்டாள். "இல்ல ஆத்தா சலீம் அண்ணே வந்துருச்சான்னு பாக்கவந்தே எனக்கு நூருவா பால் கணக்கு வரணும்" என்று ஏக்கமாய் கேட்டான். இல்லை என்று சொர்ணம்மாள் தலை ஆட்டினாள். அவளின் பதில் முருகேசுக்கு பெரும் சோகமாயிருந்தது.



சலீம் கடைக்கு வரும் பால்பேக்கட்டுகளைத் தினமும் காலையில் ஒவ்வொரு வீடாய் போடும் முருகேசுக்கு கமிசன் மாதிரி சலீம் மாதச்சம்பளம் கொடுப்பான். அப்பிடி சேர்த்து வைக்கும் பணம்தான் முருகேசுக்குப் படிப்புச்செலவு. ரத்தினபுரி அரசு பள்ளிக்கூடத்தில் பத்தாவது படித்துவந்தான். நூறு ருபாய் என்பது முருகேசுக்கு ஓர் ஊரை வாங்கும் பணமது. மாதம் இருபது ருபாய் என்று கமிசன் வாங்கும் அவன், காசு வாங்கினால் செலவாகிடும் என்று கணக்கு மட்டும் வைத்துக்கொண்டு வந்தவன், அய்ந்து மாதச் சம்பளம் போனதில் முகம் தொங்கிப் கடையையே சுற்றிச்சுற்றி வந்தான்.


அவ்வீதியில் இருந்த எல்லோருக்கும் ஒரு குற்றவுணர்வு இருந்தது. நம்மப்வீட்டு புள்ளமாறி பழக்கமா இருந்த புள்ளைய அவுனுங்க அடிக்கும்போது நாமே ஏன் தடுக்குலே? தடுக்காமப் போனதற்கு என்ன காரணம்? அவனா குண்டு வச்சான்? எவனோ வச்சதுக்கு இவனஅடுச்ச போது ஏன் தடுக்கமுடியல" என்று குற்றவுணர்வு அவர்களை வாட்டியது. சலீம்பற்றிய நினைவுகள் சொர்ணம்மாவை இம்சை செய்து கொண்டிருந்தது. ஊருக்குத்தான் சலீமின் கடைவாசலை பெருக்குபவள். ஆனால், அந்தக் கடையின் முதலாளிபோல் நடந்துகொள்ளும் அவளின் பவுசு இனிமேல் வாய்க்குமோ என்று உறுத்தலாகவே இருந்தது. காலை கடை திறக்கும்முன்பே கடைவாசல் கூட்டித் தண்ணிர்தெளித்து பளிச்சென்று வைத்துவிடுவாள். கடையில் அப்பப்போ கிடைக்கும் காய்கள், பண்ணு, இன்னும் மிச்சமான ஒன்னு ரெண்டு என்று கணக்குப் பாக்காமே கொடுக்கிற புள்ள அது" என்று உள்ளுக்குள் பொருமினாள், எந்தக் கவலையும் இல்லாமல் காலத்தை ஓட்டிவிடலாம் என்று இருந்தவளுக்கு சலீமின் ஓட்டம் பெரும் இடியாய் இருந்தது. கேரளா கொழிஞ்சாம் பாறையிலிருந்து பிழைப்புக்காக வந்தவன் உயிர்பிழைத்தால் போதுமென்று தலைதெறிக்க ஓடிவிட்டான்.

ஆஸ்பத்திரி முன்பு புதுஹோட்டல் வந்ததால் போலீஸ் இட்லிக்கடை வைக்க தொடர்ந்து தொல்லை செய்ததாலும், முன்பைப்போல் எல்லாவற்றையும் சுமந்துக்கொண்டு கடைவைக்க தெம்பு இல்லாததாலும் அடுத்து வாழ்க்கை ஓட்ட என்ன செய்யலாம் என இருந்தபோதுதான் சலீம் இரத்தினபுரியில் கடை வைத்தான். "தம்பி தினமும் வாசல் எல்லாம் கூட்டிப்பெருக்கிறேன். ஏதாவது மாசமனா கொடு சாமி" என்று வம்படிக்குப் போய் வேலைவாங்கினாள். எந்த மறுப்பும் சொல்லாமல் அவன் தலையாட்டினான். யாருமில்லாத தனக்கு ஒத்தாசையாக சலீம் இருப்பது பலநேரம் அவளுக்கு ஆறுதலாய் இருந்தது. அவன் இங்கு வந்து சேர்ந்த பழைய நினைவு அவளை வாட்டியது.

பத்து வருடத்திற்குமுன்பு கேரளாவிலிருந்து "கோயமுத்தூர் போனால் கடைவைத்துப் பிழைக்கலாம்" என்று டவுனுக்குள் மளிகைக்கடை வைத்திருந்த அவன்மாமா சொல்லி இங்கு வந்தவன். அவனின் இந்தப் பத்து வருட வாழ்வில் ஒருமுறைகூட யாரிடமும் முகத்தைக் காட்டியதில்லை "அங்கே எங்கூட வந்து கொஞ்ச நாள் கடையப் பாத்துக்கோ, வியாபாரம் பழகி அங்கேயே நல்ல இடமா பாத்து கடய வையு" என்று சொல்லி அவன் மாமா அழைத்துவந்தார்.

இந்நகரத்தில் பெரும்பாலுமுள்ள மளிகைக்கடைகள் கேரளாக்காரர்களின் கடையாகத்தான் இருந்தது. ஒன்று ரெண்டு கடைகள் அண்ணாச்சிகள் வசம். பேக்கரி என்றால் அது முழுக்க முழுக்க சேட்டன்கடையாகவே இருந்தது. இந்நகரத்திற்கும் கேரளாவிற்கும் நெருங்கிய பந்தமிருந்தது. ஊரில் பொண்ணு கிடைக்காத தெல்லவாரிகள் எல்லோருக்கும் புகலிடம் கேரளாதான். இங்கே செய்யும் பொறுக்கித்தனம் எல்லாம் தெரியாமல் பொண்ணு கொடுத்து கொஞ்சநாளில் பெண்ணைத் திரும்ப அழைத்துப் போன கதைகள் ஏராளம் இங்கே, ஒரு கட்டத்தில் எந்த ஊருக்கு வேணுமுனாலும் பொண்ணு கொடுங்க அந்த கோயமுத்தூர்க் காரனுங்களுக்கு மட்டும் கொடுத்துடாதீங்க என்று சொல்லுமளவுக்கு நிலைமை இருந்தது. தெருவுக்குப் பத்து வீடுகள் மலையாளக் குடும்பமாகக் குட்டி கேரளாவாக இந்நகரம் இருந்ததால் நம்பி வந்த சலீம் வெம்பிப் போய்விட்டான்.


சலீம் ஓடிப்போனதில் கடன் சொல்லி வாங்கிக் குவித்த மளிகைக்கு இனிப் பணம் கொடுக்க வேண்டியது இல்லை என்ற மகிழ்ச்சியும், அவசரத்துக்குக் காசு இல்லாட்டியும் கடன் கொடுக்கிற சேட்டான் இல்லையே என்ற வருத்தமும் ஒருசேர தெருவில் இருந்தது. சலீம் ஒரு முஸ்லீம் என்று அந்தத் தெருவாசிகள் எப்போதும் நினைத்தது கிடையாது. அப்பிடியான எந்தச் சிந்தனையும் இல்லாத தெருவில் புதிய சிந்தனைக்கு விதையாய் சலீம் கடை எரிக்கபட்டது.



கலவரத்தைப் பற்றியே கேள்விப்படாத அந்நகரத்தில் அந்த அனுபவம் எல்லோருக்கும் புரியாத புதிராகயிருந்தது. சலீம் கடை எரிக்கப்பட்ட கொஞ்ச மாதங்களுக்கு முன்னதாகவே முக்கோண வடிவிலிருந்த கொடிகள் ரத்தினபுரி வீதிகளில் அடிக்கடி கண்ணில்பட்டது. சில இளவட்டங்கள் நெற்றியில் இழுக்கப்பட்ட பொட்டுகளோடு பால் மாரியம்மன் கோவில் மைதானத்தில் மாலை நேரத்தில் கூடி இரவு வரை வட்டமாய் உட்கார்ந்து பேசிக்கலைவதும், இடையிடையே உடற்பயிற்சி செய்வதும் "ஆ ஊ" என்று கத்திக்கொண்டு கராத்தே பயிற்சி செய்வதும் புதியதாக அவ்வீதியில் முளைத்திருந்தது. இதற்காகவே மாஸ்டர் ஒருவர் வந்திருந்தார். தெருவில் இருந்த பள்ளிக்கூட பொடுசுகள் "ப்ரீ கராத்தே கிளாஸ்" என்று அதுகளும் "ஆ....ஊ...." என்று அந்த மைதானத்தில் கத்திக்கொண்டிருந்தனர். இருட்டும்போது பயிற்சி முடிந்தது என்று பொடுசுகளை மட்டும் அனுப்பிவிட்டு இளசுகளிடம் வட்டமாக உட்காரப் வைத்து பேசுவார் அந்த மாஸ்டர்.

சலீம் கடைக்கு எதிரேயிருந்த சிக்கந்தர் பையன் அமீரும் கராத்தே கிளாஸ் போனான். அய்ந்தாம் வகுப்பு படிக்கும் அமீர் உற்சாகமாய் போய்க்கொண்டிருந்த கொஞ்ச நாளில் எந்தக் காரணமும் இல்லாமல் மாஸ்டர் வரவேண்டாம் என்று கூறிவிட்டார். அதற்கு மாஸ்டர் சொன்ன காரணம் "இன்னும் கொஞ்சம் பெரியவனானால் தான் உனக்கு நல்ல வரும் இப்போ சரியா வரமாட்டிங்குது" என்று, ஆனால் அவன் சோட்டுப் பொடுசுகளை மட்டும் அந்த மாஸ்டர் வேண்டாம் என்று சொல்லவில்லை. "நானும் நல்லாத்தானே செய்தேன் அப்புறம் ஏன் எனக்கு சரியாக வரலைனு மாஸ்டர் சொல்றாருன்னு" அமீர் மண்டை குழம்பிக்குழம்பி யோசித்தான். அந்தக் குட்டிமூளையில் எதுவுமே விளங்கவில்லை, ஒருவாரம் அந்த மைதானத்திலேயே உட்கார்ந்திருந்த அமீர் எப்படியும் மாஸ்டர்

கூப்பிடுவார் என்று எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏங்கிப்போனான், ஏக்கம் தாங்காமல் இருந்த அமீரை அவள் அம்மா அந்தப்பக்கமே போகாதேன்னு கண்டிப்பா சொல்லிவிட்ட பின்புதான் அங்கு போவதையே நிறுத்திக் கொண்டான். இருந்தாலும் மனசுக்குள் “ஆ ஊ“ சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது. அதற்குள் பட்டம் சீசன் வந்ததால் பட்டம் கராத்தே ஏக்கத்தை வானத்திற்குக் கொண்டுபோய் மறக்கடிக்க வைத்தது. அனைத்தையும் இழுத்துக் கொண்டு போகும் பெரும் அலை போல பட்டம் எல்லாப் பொடுசுகளையும் அள்ளிக் கொண்டு வந்து தெருவில் கிடத்தியது. “ஆ...ஊ” சத்தம் போய் என்னோடது மாஞ்சா நூலு? உன்னோடது மாஞ்சா நூலா? யாரு பட்டம் அருக்குதுன்னு பாத்துகலாமா” என்ற முக்கிய பிரச்னைதான் சிறிசுகளிடம் இருந்தது. மைதானத்திலும் இளசுகளின் வட்டம் சுருங்கியிருந்தது ஆனால் கரையவில்லை.



மாலைப்நேரப் பயிற்சிவகுப்பில் புதிய இளவட்டங்கள் கொஞ்சம் சேர்ந்திருந்தார்கள். பக்கத்துத் தெருவில் உள்ளவர்களுக்கும் அவ்விடம் பயிற்சிவகுப்பாக மாறியது. கொஞ்சநாளில் சில இளவட்டங்களை மட்டும் தேர்வு செய்து எங்கோ அரசியல் பயிற்சிவகுப்பு நடக்கிறது என்று அழைத்துச்சென்றார் மாஸ்டர். அழைத்துச் சென்ற இளசுகள் தெளிவுபெற்ற அறிவாளிகள்போல் மாஸ்டர் இல்லாத நேரத்தில் மாஸ்டராக இருந்து வகுப்பை நடத்தினார்கள். தீவிரமாய் அவர்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

விநாயகர் விழாவுக்கு நன்கொடை கேட்டு மைதான இளவட்டங்கள் மாஸ்டர் தலைமையில் சலீம் கடைக்கு வந்தபோது பணத்துடன் “பொங்கல் வைத்தால் கொடுங்கள்” என்று பையில் கொஞ்சம் வெல்ல உருண்டைகளையும் போட்டுக் கொடுத்தான். கடைவீதியில் உள்ள மாமாகடையில் வேலைபார்த்த போது பக்கத்திலிருந்த மாரியம்மன்கோவில் பொங்கல் சாப்பிட்டு பழகிய நாக்கு இன்னும் கோவில் பொங்கலுக்கு அலைந்தது.

பத்து வருட கோவை வாழ்க்கையில் சலீம் நன்றாய்த் தமிழ் பேசக் கற்றிருந்தான். சலீம் கடை எல்லோருக்கும் அடையாளம் சொல்லுமளவுக்குப் பரவியிருந்தது. அதற்கு அவனின் உழைப்பு கொஞ்சம் நஞ்சம் அல்ல. காலையில் ஆறுமணிக்குக் கடைதிறந்தால் இரவு எல்லாம் எடுத்துவைக்கப் பதினொன்று பன்னிரெண்டு ஆகிவிடும், எந்த நல்லது கெட்டதிற்கும் போகாமல் கடையையே கட்டிக்கொண்டு அழுதவனுக்கு ஆய்சா நல்ல சோடியாக இருந்தாள். கூடமாட ஒத்தாசிசெய்து அவளும் சேர்ந்தே உழைத்தாள், ஒருமுறை கடைக்குள்ளேயே மயக்கமானவளைச் சொர்ணம்மாதான் தாங்கிப்பிடித்து கண்ணையும் நாடியையும் பார்த்துப் புள்ளதாச்சியா இருக்கேன்னு வாயில் சர்க்கரைபோட்டாள். அப்போதிலிருந்து ஆய்சாவை எந்தவேலையும் செய்யவிடாமல் அனைத்தையும் அவனே செய்தான். கூட்டிப் பெருக்குற வேலையையும் தாண்டி சொர்ணம்மாள் கடையின் சின்னச்சின்ன வேலையைத்தானே எடுத்துக்கொண்டாள். அது அவனுக்குக் கொஞ்சம் தோதுவாக இருந்தது. பாட்டிவைத்தியம்போல் அப்பப்போ ஆய்சாவுக்கும் மருத்துவக் குறிப்புகள் சொல்லுவாள். சொர்ணம்மாள் அசைக்க முடியாத இடத்தை வைத்திருந்தாள். வயிறுபெருத்த ஆய்சா பொறுமையாகப் பிரசவம்பார்க்க ஊருக்குப் போகிறேன் என்றாள். “இது விளையாட்டுக் காரியமில்ல ரெண்டு உசுரு” என்று சொர்ணம்மா திட்டி, சலீமிடம் சொல்லிப் போனமாதம்தான் தன் மனைவியைப் பேத்துக்காக ஊரில் விட்டு வந்திருந்தான்.

கடையும் வீடும் ஒன்றாக இருந்ததால் அவன் எங்கும் போகவேண்டியது இல்லை. ஆய்சா இல்லாததால் வாய்க்கு ருசியாய் எதாவது செய்யும்போது சொர்ணம்மாள்

மறக்காமல் சலீமுக்கும் கொண்டு வருவாள் அதனால் சொர்ணம்மாளின் மீது தனி அக்கறையும் அவனுக்கு உண்டு.

முந்தைய கலவரத்தின் போது பல கடைகள் அடித்து நொறுக்கிய போதும் சலீம் கடை தப்பிக்க காரணம் யாரிடமும் முகம் காட்டாத அவன் குணம். இம்முறை திட்டமிட்டுத் தாக்கப்பட்டது. எவனோ நகரத்தில் குண்டுவைத்ததாகச் சொல்லி இவனின் கடை சின்னாபின்னமானது.



அன்று மதியம் சொர்ணம்மாள் கொண்டுவந்த கருவாட்டுக் குழம்பு வாய்க்கு வக்கணையாய் இருந்தது. பசியோடு இருப்பதை அவன் முகமே காட்டியது, கடையில் சொர்ணம்மாவை உட்கார வைத்துவிட்டு உள்ளறையில் எச்சில் ஊற இரண்டு வாய் எடுத்துச் சாப்பிட்டநேரம் பிஸ்கட் அடுக்கி வைத்திருக்கும் பெரிய பாட்டில் "படீர்" என்று உடைத்து சிதறிய சத்தம்கேட்டு எச்சில் கையோடு ஓடிவந்தான். மைதானத்தில் பயிற்சிசெய்து கொண்டிருந்த பக்கத்துத்தெரு இளவட்டங்கள் சலீம் கடையை நொறுக்கிக் கொண்டிருந்தனர். கடையை எதற்காக அடிக்கிறார்கள் என்று புரியாமல் சலீம் தடுத்தான். அவனின் பத்து ஆண்டு உழைப்பை நொறுக்கித் தள்ளுவதை அவனால் தாங்கமுடியவில்லை.

"டே ஏன்டா கடையே ஒடக்கிறீங்கே நிறுத்துங்கட, நிறுத்துங்கட அந்த புள்ள பாவம் டா" சொர்ணம்மாள் அழுது அழுது தடுத்தாள். அவர்களின் காதில் எதுவுமே விழவில்லை.

அதில் ஒருவன் பெட்ரோலால் நிரப்பப்பட்ட பாட்டிலை திரிக்கிள்ளி பற்றவைத்து கடைக்குள் தூக்கி அடித்தான். அது நெருப்புமிழ்ந்து கடையைக் கருக்கியது. விநாயகர்விழாவுக்கு சலீம் கையில் காசுவாங்கிய கராத்தே மாஸ்டரின் கைவிரல்கள் சலீம் கன்னத்தில் கோடுகளாய் பதிந்தது. அலறிய சலீம் "அடுச்சாலும் பரவால்ல என்கடையே விட்டுடுங்க அண்ணே" மாஸ்டரின் காலைப்பிடித்துக் கதறினான். அவன் நெஞ்சின் மீது ஓங்கி உதைத்தபோது நிலைகுலைந்து கீழே விழுந்தான்.

இன்னொருவன் கையில் வைத்திருந்த உருட்டுக்கட்டையால் அவன் காலில் ஓங்கி அடித்தான். "அம்மே! அம்மே!" வலியில் அலறினான். சொர்ணம்மா கடையைக் காப்பதா இல்லை மகனாய்ப் போன புள்ளையைக் காப்பதா என்று தெரியாமல் இங்கும் அங்கும் ஓடினாள். அவளையும் நெட்டித்தள்ளி ரெண்டு அடி விட்டார்கள். தடுமாறிக் கீழே விழுந்தாள். தனது கடையை எதற்கு அடிக்கிறார்கள் என்று எதுவுமே புரியாமல் சலீம் தடுத்துத் தடுத்துப் பார்த்தான். ஒவ்வொரு முறையும் அவுனுக்கு அடிவிழுந்தது. முகம்,கை, கால், முதுகு எனச் சகட்டுமேனிக்கு விழுந்த அடியில் நிலைகுலைந்துபோன அவனின் சிவந்த உடலில் சிவந்த பாம்பாய் ரத்தம் ஊர்ந்தது. பித்துப் பிடித்தவனைப் போல் அடித்து நொறுக்கும் கடையைப் பார்த்துக் கொண்டேயிருந்தான். தினமும் காலையில் வீசியெறியும் வருக்கியை லாவகமாய்ப் பிடித்து நொறுக்கும் தெருநாய் மட்டும் சலீமையும் கடையையும் மாறிமாறிப் பார்த்துக் குறைத்துக் கொண்டேயிருந்தது. இவர்களைத் தடுக்க முடியாது உயிராவது மிஞ்சட்டும் என்று தடுமாறி எழுந்தவன் கிழிந்த சட்டையோடு கைலியைத் தூக்கிக் கட்டி பிச்சகாரனைப் போல் அடிபட்ட காலைத் தூக்கி வைக்க முடியாமல் இழுத்துயிழுத்து அழுது கொண்டேபோனான்.

அவன் போன கோலம் இன்னும் சொர்ணம்மாவின் கண்ணில் அகலாமல் அப்பிடியே இருந்தது. ஒருவாய் நிம்மதியாகக்கூட சாப்பிடாமல் ரத்தம் வழிந்த சோற்றின் எச்சில் கையோடுபோன முகம் அவளை அழவைத்துக் கொண்டேயிருந்தது. தலையுயர்த்தி புகையடித்த கடையைப் பார்த்த அவளுக்குத் தாங்க முடியாத மனவலி கண்ணத்தில் நீர்க்கோடுகளாய் வழிந்தோடியது, அழுகையில் நெஞ்சு விம்மியது. தனது நெஞ்சின்மீது யாரோ உட்காருவதுபோல் அவளுக்குப் பாரம் அழுத்தியது. தலைவைத்துச் சாய்ந்திருந்த புங்கமரத்திலிருந்து பூக்கள் அவள் மீது விழுந்து கொண்டிருந்தது.

# அநீதி இழைப்பதற்குப் பெயர் அளவில்லா அன்பா?

# பாசிஸ்டுகளின் பகல் வேடம்

**மணிமாறன்**

தமிழ் மொழி, திருக்குறள், தமிழ் மன்னர்கள், அவர்களின் வரலாறு மீது பாஜகவுக்கும் அதன் மாநில தலைவர் அண்ணாமலைக்கும் திடீர் பாசம் பீறிட்டு பொங்குகிறது.

என் மண்; என் மக்கள் என்ற பெயரில் அண்ணாமலை சொகுசுப் பயணம் மேற்கொண்டு வருகிறார். நினைக்கும் போதெல்லாம் சென்று வரும் இந்தப் பயணத்தில், அவர் புளுகியவை ஏராளம். அவற்றை அம்பலப்படுத்தியும் வரலாற்று உண்மைகளை உணர்த்தியும் சமூக ஊடகங்களில் பலர் பதிவிட்டு வருகின்றனர்.



தமிழ் மொழியின் மீதும் தமிழ்நாட்டு வரலாற்றின் மீதும் அண்ணாமலையும் அவர் சார்ந்திருக்கும் பாஜகவும் வெளிப்படுத்தும் பாசம் குறித்துப் பார்க்கலாம்.

“குஜராத்தில் பிறந்த மோடிஜி தமிழின் தொன்மையை உலகம் முழுவதும் சொல்லி வருகிறார். ‘மனதின் குரல்’ நிகழ்ச்சியில், உலகின் தொன்மையான தமிழ் மொழியில் தன்னால் சரளமாகப் பேச முடியவில்லையே என்று வருத்தப்பட்டார். தமிழ் நாட்டின் மீது அவருக்குப் பற்று இருக்கிறது. தமிழ் கலாச்சாரத்தின் மீது பாசம் இருக்கிறது. தமிழ் மொழியின் மீது அளவில்லா அன்பு இருக்கிறது. தமிழனாகப் பிறக்கவில்லையே என்ற குறை பிரதமர் மோடிக்கு இருக்கிறது” இது பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலையின் பேச்சு.

அடடே, எவ்வளவு அருமையான பிரதமர் கிடைத்திருக்கிறார். தமிழின் மீதும் தமிழ் நாட்டின் மீதும் மோடிக்கு இருக்கும் பற்று யாருக்கு இருக்கிறது? அவரை தமிழர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டாமா? என்று அண்ணாமலை அங்கலாய்க்கிறார்.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு பிரதமர் மோடி ஆற்றிய பணிகள் என்ன? ஒன்றிய அரசு தமிழ் மொழிக்காக என்ன செய்கிறது? உலகின் தொன்மையான தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு ஒன்றிய பாஜக அரசு, 2017 2020 ஆகிய 3 ஆண்டுகளில் 22.85 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. இதே காலத்தில் 24,821 பேர் மட்டுமே பேசக் கூடிய சமஸ்கிருத மொழிக்கு 643.84 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது எனப் பார்ப்போம்.

இது பற்றி நாடாளுமன்றத்தில் ஒன்றிய கலாச்சாரத்துறை அமைச்சர் விளக்கம்


அளித்துள்ளார். அதன்படி, "மனித வள மேம்பாட்டு அமைச்சகம் ராஷ்டிரிய சமஸ்கிருத சன்ஸ்தானத்தை நிறுவி, அதற்கு மூன்று ஆண்டுகளில் (2017 2020) 643.84 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 201718ல் 198.31 கோடி ரூபாய். 201819ல் 214.28 கோடி ரூபாய். 201920ல் 231.13 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளன" என்று ஒன்றிய அமைச்சர் கூறுகிறார்.

இதே காலத்தில், தன்னாட்சி அமைப்பான செம்மொழி தமிழாய்வு நிறுவனம் மூலம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 201718 ஆம் ஆண்டில் 10.59 கோடி ரூபாய். 2018 19ல் 4.56 கோடி ரூபாய். 201920ல் 7.7 கோடி ரூபாய் என குறைவான நிதியையே ஒதுக்கீடு செய்துள்ளது.

தெலுங்கு, கன்னட மொழிகளுக்கு இதைவிட பெரும் ஓரவஞ்சனை. 2017 2020 வரையிலான 3 ஆண்டுகளில் தலா 3.06 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மலையாளம், ஒடியா மொழிகளுக்கு எந்த நிதியும் ஒதுக்கவில்லை.

அதாவது, செம்மொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா ஆகிய ஐந்து மொழிகளுக்கும் 29 கோடி ரூபாய். சமஸ்கிருத மொழிக்கு மட்டும் 643.84 கோடி ரூபாய். இந்தியாவின் எந்தப் பகுதியிலும் மக்களால் பேசப்படாத ஒரு மொழிக்கு 22 மடங்கு அதிகமான நிதியை ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இதுதான் பிரதமர் மோடியின் அளவில்லா தமிழ்ப் பற்று(?). தமிழனாக பிறக்கவில்லையே என்று அவர் குறைபடுவதன் லட்சணம். இவற்றைத்தான் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை ஊர் ஊராகப் பேசி வருகிறார். மற்றொரு ஒன்றிய அமைச்சர் அமித்ஷா தமிழில் பேச முடியவில்லையே என வருத்தப்பட்டு மன்னிப்பு கேட்கிறார்.



பெருமழை, வெள்ளத்தால் சென்னை அதனையொட்டிய மாவட்டங்களும் தென்மாவட்டங்களும் கடுமையாக பாதிக்கப்பட்டன. மக்கள் செய்வதறியாமல் திகைத்து நின்றனர். தமிழ் நாட்டுக்கு தமிழ் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டியதா ஒன்றிய அரசு? பாசம் மிகுந்த பிரதமர் ஓடோடி வந்தாரா? ஒன்றியத்தின் கருவூலத்திலிருந்து ஏதேனும் கிள்ளிப் போட்டாரா?

நேர்முக வரி, மறைமுக வரி, சுங்கக் கட்டணம், சாலையில் ஊர்திகள் செல்வதற்குக் கட்டணம் (டோல்), கூடுதல் வரி (செஸ்), வருமான வரி இப்படி பல்வேறு பெயர்களில் தமிழ்நாட்டின் வளங்களைச் சுரண்டி செல்லும் ஒன்றிய அரசு, அதன் பிரதமர் மோடி தமிழ்நாட்டிற்கு என்ன செய்தார்? ஒன்றும் இல்லை.

மாநிலங்களுக்கான வரிப் பங்கீட்டில் தமிழ்நாட்டுக்கு பெரும் அநீதி இழைக்கப்படுகிறதே, இதுதான் பாஜகவின், பிரதமர் மோடியின் தமிழ் பாசமா? தமிழ்நாட்டின் மீதான பற்றா?

அரசியலமைப்பு சட்டம் வழங்கியுள்ள பெயரளவிலான கூட்டாட்சியும் காணாமல் போய் போய்விட்டதே ஏன்?

"நல்லவன் வருகிறான், செம்பை எடுத்து உள்ளே வை" என்றொரு பழமொழி தமிழில் உண்டு. தமிழ் மொழி, தமிழர்களின் வரலாறு, இலக்கியம் என பேசிக்கொண்டு பாசிஸ்டுகள் வருகிறார்கள். தமிழர்களே விழிப்போடு இருங்கள்.

# சாதிவாரி கணக்கெடுப்பு : தேவையும் அரசியலும்

- சிலம்புச்செல்வன்

சாதிவாரி கணக்கெடுப்பு குறித்து காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி "பீகாரில் ஓ.பி.சி. எஸ்.சி.,எஸ்.டி. என அனைவரும் 84% என்று சாதி மக்கள் தொகை கணக்கெடுப்பு காட்டுகிறது. மத்திய அரசின் 90 செயலாளர்களில், 3 பேர் மட்டுமே ஓ.பி.சி. வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இந்தியாவின் பட்ஜெட்டில் 5% மட்டுமே கையாளுகின்றனர். எனவே, இந்தியாவின் சாதிப் புள்ளி விவரங்களை அறிந்து கொள்வது அவசியம். அதிக மக்கள் தொகை, அதிக உரிமைகள், இது எங்கள் உறுதிமொழி," என்று கூறியுள்ளார். வரலாற்றில் ஒரே நிகழ்வு இரண்டாவது முறையாக நிகழும் போது அது அவலச்சுவை நிறைந்த ஒன்றாக மாறிவிடுகிறது. 1990 ஆம் ஆண்டு முன்னாள் தலைமை அமைச்சர் திரு வி.பி.சிங் மண்டல் கமிஷன் அறிக்கையை அமல்படுத்திய போது ராஜீவ் காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சியும் அத்வானி தலைமையிலான பாஜகவும் இணைந்து நாட்டை கூறுபோடுவதாக கூக்குரல் இட்டதுடன் வி.பி.சிங் தலைமையிலான அரசையும் கவிழ்த்தார்கள்.

இன்று வரலாற்று சக்கரம் சுழன்று தொடங்கிய இடத்திற்கே வந்துள்ளது. இம்முறை பீகாரில் சாதிவாரி கணக்கெடுப்பை நிகழ்த்தியவர் வி.பி.சிங்கின் அரசியல் வாரிசுகளில் ஒருவரான நிதிஷ்குமார். கணக்கெடுப்பு விவரங்கள் வெளியிடப்பட்டவுடன் இந்நிகழ்வை வரவேற்று பேசியுள்ளார் காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி. காங்கிரஸ் கட்சி ஒரு காலத்தில் நேர் எதிரான நிலையை எடுத்ததில் இருந்து இது தலைகீழ் மாற்றமாகும். அதேநேரம் பாஜக தலைவரும் தலைமை அமைச்சருமான நரேந்திர மோடி இது நாட்டை பிளவுபடுத்தும் நடவடிக்கை என்று கூறியுள்ளார். பாஜக அவர்களின் கடந்தகால கருத்திலேயே உறுதியாக உள்ளதை காட்டுகிறது. அநேகமாக "இந்தியா" கூட்டணியின் அரசியல் திசைவழியை தீர்மானிப்பதாக இந்த சாதிவாரி கணக்கெடுப்பு அமையலாம். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இந்த நடவடிக்கை குறித்தும் இதனோடு தொடர்புடைய அரசியல் மற்றும் வரலாற்று பின்புலம் குறித்தும் நாம் பரிசீலனை செய்வது அவசியம்

## சமூகநீதிஅரசியல்

இந்தியா போன்ற வர்ணாசிரம சாதி அமைப்பு உள்ள சமூக அமைப்பில் வகுப்புவாரி அரசியல் என்பது முதன்மை வாய்ந்தது. இதை நாம் பிரதிநிதித்துவ அரசியல் என்றும் சமூகநீதி கொள்கை என்றும் அழைக்கலாம். அகில இந்திய அளவில் அண்ணல் அம்பேத்கரும் தமிழ்நாட்டில் தந்தை பெரியாரும் இதை தீவிரமாக முன்னெடுத்தவர்கள் சமூகநீதி கொள்கை தமிழ்நாட்டில் ஒரு நூற்றாண்டுக்கும் மேலான வரலாறு கொண்டது. தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தொடங்கிய இந்த அரசியல் தந்தை பெரியாரால் வளர்த்து நடைமுறைக்கு கொண்டு செல்லப்பட்டது.

வடநாட்டில் சாகு மகராஜ் காலத்தில் தொடங்கப்பட்ட இட ஒதுக்கீடு மற்றும் சமூகநீதி அரசியல் அண்ணல் அம்பேத்கரால் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. சமூகநீதி அரசியலின் அடிப்படை என்பது பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கு அரசியல் அதிகாரத்தில் பகிர்வு சமூக வளங்களில் பகிர்வு கல்வி வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.

## சாதிவாரி கணக்கெடுப்பு வரலாறு

இட ஒதுக்கீடு அளிப்பதற்கு சாதிவாரி கணக்கெடுப்பு என்பது அவசியமும்

அடிப்படையும் ஆகும். சமூக நீதி வரலாற்றுக்கு ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட வரலாறு உள்ளது போலவே சாதிவாரி கணக்கெடுப்புக்கும் ஒரு நூற்றாண்டுக்கும் மேலான வரலாறு உள்ளது.

1872 இல் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த கணக்கெடுப்புடன் சாதிவாரி கணக்கெடுப்பும் நடத்தப்பட்டது. அதுமுதல் 1931 வரை ஒவ்வொரு மக்கள் தொகை கணக்கெடுப்புடன் இணைந்து சாதிவாரி கணக்கெடுப்பும் நடத்தப்பட்டது. இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தான் ஆங்கிலேயர்களின் காலனி ஆட்சியில் இருந்து இன்றைய பாஜக தலைமையிலான இந்திய அரசு வரை இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. ஏறத்தாழ முக்கால் நூற்றாண்டு கழித்து 2011 ஆம் ஆண்டில் மீண்டும் சாதிவாரி கணக்கெடுப்பு மக்கள் தொகை கணக்கெடுப்புடன் இணைந்து எடுக்கப்பட்டது. ஆனால் அதை இன்று வரை வெளியிட பாஜக அரசு மறுத்து வருகிறது. வெளியிட்டால் நிறைய குழப்பங்கள் ஏற்படும் என்று காரணம் கூறி நிறுத்தி வைத்துள்ளது. இத்தகைய சூழலில் தான் பீகாரில் நடத்தப்பட்ட சாதிவாரி ஆய்வு முக்கியத்துவம் வாய்ந்தது.

## சட்டப்போராட்டமும் சாதிவாரி கணக்கெடுப்பும்

பீகாரில் நடத்தப்பட்ட சாதிவாரி கணக்கெடுப்பு எண்ணிக்கை அடிப்படையிலான ஓர் ஆய்வு (**Survey**) தானே ஒழிய மக்கள் தொகை கணக்கெடுப்பு (**Census**) அல்ல.1948 ஆம் ஆண்டு சட்டத்தின் படி ஒன்றிய அரசு மட்டுமே கணக்கெடுப்பு நடத்த முடியும்.

பீகார் அரசு சர்வே நடத்த முடிவெடுத்த போது இப்படி ஒரு சர்வே நடத்தவே உரிமையில்லை என்று பாஜகவும் இந்திய நடுவண் அரசும் எதிர்ப்பு தெரிவித்தன. உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது உச்சநீதிமன்றம் சாதிவாரி கணக்கெடுப்பு இல்லையெனில் எவ்வாறு இட ஒதுக்கீடு வழங்க முடியும் என்று கேட்டு தடை விதிக்க மறுத்தது. மேலும் இதுகுறித்து பீகார் உயர்நீதிமன்றத்தில் முறையிட ஆலோசனை கூறியது. பீகார் உயர்நீதிமன்றமும் தடை விதிக்க மறுத்து விட்டது.

பீகாரின் மக்கள் தொகை 13கோடிப்பேர். இவர்களை முற்றிலும் உள்ளடக்கி சர்வே நடத்தப்பட்டுள்ளது. ஜூன் 2022 இல் தொடங்கி 45 நாட்கள் ஆய்வு நடத்தப்பட்டது. மொத்தம் 500 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. 15 மாதங்களில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

## சாதிவாரி ஆய்வு முடிவுகள்

வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்களின்படி, மாநிலத்தில் மிகப்பெரிய மக்கள்தொகை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். இது மாநிலத்தின் மொத்த மக்கள்தொகையில் சுமார் 36.01% ஆகும். இது தவிர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 27.12% பட்டியல் சாதி 19.65% இடஒதுக்கீடு இல்லாத உயர் சாதியினர் சுமார் 15.52%, பட்டியல் பழங்குடி மக்கள் 1.68% ஜாதி அடிப்படையிலான மக்கள்தொகை கணக்கெடுப்பில் கிடைத்திருக்கும் மேற்கூறிய தரவுகளின் படி, மத நம்பிக்கைகளின் அடிப்படையில் பீகாரில் இந்துக்கள் அதிகம் உள்ளனர்.

மாநிலத்தில் இந்துக்களின் மக்கள் தொகை சுமார் 82%. அதேசமயம், முஸ்லிம்கள் 17.7% கிறிஸ்தவர் 0.05% பௌத்தர்கள் 0.08%. சீக்கியர்கள் 0.01% இது தவிர, சமணர்கள் மற்றும் வேறுசில மதத்தினரும் பிகாரில் உள்ளனர். எந்த மதத்தையும் பின்பற்றாதோர் 2,146 பேர் அதாவது 0.0016% பேர் மட்டுமே உள்ளனர்.

பீகாரின் முக்கிய உயர் சாதியினரைப் பற்றி நாம் பேசினால், மாநிலத்தில் பிராமணர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. பிராமணர் மக்கள் தொகை 3.65% ராஜபுத்திரர் மக்கள் தொகை 3.45% பூமிஹார் மக்கள் தொகை 2.86% திருநங்கைகளின் மொத்த எண்ணிக்கை 825 என குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடத்தக்க ஒன்று இஸ்லாமியர்களில் உயர்நிலையில் உள்ள முற்பட்ட சமூகத்தையும் முற்பட்டோருக்கான கணக்கீட்டில் இணைத்து கணக்கெடுத்து உள்ளனர்.

## ஆய்வினால் ஏற்பட்ட விளைவுகள்

பீகாரின் பெரும்பான்மை மக்கள் தொகைக்கு ஏற்ப தற்போது பீகார் அரசு இட ஒதுக்கீடு அளவை 65 % ஆக அதிகரித்துள்ளது. இதன் மற்றொரு விளைவாக இந்திய நடுவண் அரசிடம் நீண்ட நாட்களாக அளிக்காமல் வைத்திருந்த ரோகிணி ஆணைய அறிக்கை உடனடியாக கடந்த ஆகஸ்ட் மாதத்தில் அளிக்கப்பட்டது. இந்த ஆணையம் கடந்த 2017 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது மூன்று மாதங்களில் முடிக்க திட்டமிடப்பட்ட ஆணையத்தின் காலவரம்பு உரிய காலத்தில் முடியாமல் தொடர்ந்து 13 முறை கால நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்போது அறிக்கை அளிக்கப்பட்டாலும் இன்னும் அதன் விவரங்கள் வெளியிடப்படவில்லை. எப்போதும் போலவே, இஸ்லாமியர்கள் மக்கள் தொகை பெருகிவிட்டது இஸ்லாமியர்கள் வரைமுறையற்று குழந்தைகள் பெற்றுக் கொள்கிறார்கள் என்று திரும்ப திரும்ப பாஜக ஒரு பிரச்சாரத்தை செய்து வந்தது. அது இந்த கணக்கெடுப்பு மூலம் பொய் என நிரூபிக்கப்பட்டுள்ளது. இப்படி பல்வேறு விளைவுகளும் ஏற்பட்டுள்ளது.

## கட்சிகள் அணுகுமுறையும் சாதிவாரி கணக்கெடுப்பின் முக்கியத்துவமும்

ஆளும் பாஜக வானது முன்னர் பார்த்தபடி இது நாட்டையும் மக்களையும் பிளவுபடுத்தும் நடவடிக்கை என்று பார்க்கிறது. உயர்சாதியினரை பாதுகாப்பதற்கான சித்தாந்தத்தையும் கருத்தியலையும் கொண்டுள்ள கட்சி என்ற முறையில் அது இந்நிலைபாட்டை கொண்டிருப்பதில் வியப்பில்லை.

காங்கிரஸ் கட்சியில் ராகுல்காந்தி சாதிவாரி கணக்கெடுப்பு குறித்து முற்போக்காக பேசியிருந்தாலும் அது கட்சியின் கருத்தாக நடைமுறைக்கு கொண்டு செல்லப்படுமா என்பது ஐயமே! காரணம் காங்கிரஸ் மென் இந்துத்துவ போக்கையே கடைபிடித்து வருகிறது. அது ஐந்து மாநில தேர்தல்களில் கூட எதிரொலித்தது. தமிழ்நாட்டை ஆளும் திமுக கொள்கை அளவில் சாதிவாரி கணக்கெடுப்பை ஆதரித்தாலும் கூட நடைமுறையில் அதை செயல்படுத்துவதற்கு தயங்குவதை அல்லது இரட்டை நிலைபாட்டை எடுப்பதை காணமுடிகிறது. கட்சித் தலைவர்களில் ஒருவரான கனிமொழி இதை ஆதரிக்கிறார். ஆனால் அங்கீகரிக்கப்பட்ட திமுக பேச்சாளர்கள் கணக்கெடுப்பு தேவையில்லை என்று பேசிவருகின்றார்கள். திமுக ஆதரவு சன் செய்தி நிறுவனமோ மக்களை பிளவுபடுத்தும் நடவடிக்கை என்று பாஜக போல கூறுகிறது.

திமுக தேர்தல் கணக்குகளில் இருந்து உறுதியான முடிவெடுக்க தயங்குவது போல் தெரிகிறது. உயர்சாதி பிரிவினரின் எதிர்ப்பு, இட ஒதுக்கீட்டில் பலனடையாத குறிப்பிட்ட பிற்படுத்தப்பட்ட சாதிகளின் எதிர்ப்பு என்று பலமுனை சிக்கல்கள் உருவாகும் என அஞ்சுவதற்கு வாய்ப்புள்ளது. அதிமுக இது குறித்து தனித்த நிலைப்பாட்டை அறிவிக்கவில்லை எனினும் திமுக போலவே தேவையற்ற புதிய சிக்கல்கள் உருவாக்கும் எதையும் செய்வதற்கு தயங்க வாய்ப்புள்ளது.

பாமக, விடுதலை சிறுத்தைகள், சிபிஐ ஆகியவை சாதிவாரி கணக்கெடுப்பை நேரடியாக ஆதரிக்கின்றன. சிபிஎம் பொருளாதார இட ஒதுக்கீட்டை ஆதரித்த அமைப்பு என்ற முறையில் அதனிடம் இருந்து தெளிவான நிலைபாட்டை எதிர்பார்க்க இயலாது. ஆனால் இன்றளவும் திராவிடர் கழகம் உள்ளிட்ட மக்கள் இயக்கங்கள் சமூக நீதியை வலியுறுத்தும் பல்வேறு அறிஞர்கள் சாதிவாரி கணக்கெடுப்பை ஆதரித்து வருகின்றனர்

தமிழ்நாட்டை பொறுத்தவரை நடைமுறையில் 69% இட ஒதுக்கீடு வழங்கப்படுவதால் மற்ற மாநிலங்களை விட முன்னணியில் உள்ளோம் என்ற வாதமும் வைக்கப்படுகிறது. ஆனால் இவை எதுவும் சாதிவாரி கணக்கெடுப்பின் முக்கியத்துவத்தை குறைப்பன அல்ல.

சமூகநீதி பார்வையோடு மக்கள் நடுவில் வலுவான இயக்கங்களை கட்ட வேண்டும். இது நூற்றாண்டின் கனவு. தலைவர்கள் கண்ட கனவு. எனவே நமது அடிகளை அதை நோக்கி வைப்போம்.

# தேசியஇனச்சிக்கலும் அதன் சிறப்புப் பண்புகளும்

-தோழர் பொன் சந்திரன்



உலகமயம், தாராளமயம், பெருகிவரும் தனியார்மயம் ஆகியவற்றின் பின்னணியில், பன்னாட்டு அமைப்புகள், நாடுகடந்த நிறுவனங்கள், உலகவங்கி, பன்னாட்டு நாணயநிதியம், உலகவணிகக் கூட்டமைப்பு போன்றவற்றின் செயல்பாட்டுச் சூழலில், குறிப்பாக ஏகாதிபத்தியத்தின் நவகாலனியக் காலக்கட்டத்தில் தேசிய இனச் சிக்கல் முக்கியமானதும் மிகுந்த ஆர்வத்தைத் தூண்டுவதுமான பரிமாணங்களைப் பெற்றிருக்கிறது. ஐரோப்பாவில் முதலாளிய ஜனநாயகப் புரட்சியின் தோற்றத்துடன் தேசிய இனச்சிக்கல் அரசியல் பொருளாதார இயக்கமாக முன்னுக்கு வந்தது. ஜெர்மனி, இத்தாலி போன்ற தேசியஅரசுகள் உருவாக்கத்துடன் அது தீர்வினைக் கண்டது. காலனியக் காலகட்டத்தின்போது காலணிகளாக்கப்பட்டதும் உருவாகிக் கொண்டிருந்ததுமான பல்வேறு தேசங்களும், தேசிய இனங்களும் தங்கள் தேசிய இனச்சிக்கல்களை (தேசிய இன ஒடுக்குமுறைகளை) ஆசியா, ஆப்பிரிக்கா இலத்தீன் அமெரிக்கா நாடுகளைப் போல் காலனித்துவத்திற்கு எதிராகப் போராடுவதன் மூலமும், காலனித்துவ அதிகாரங்களிடம் இருந்து அரசியல் விடுதலை பெறுவதன் மூலமும் அல்லது பிரிந்து செல்வதன் மூலமும் தீர்வு கண்டன..

மேற்கண்ட முதலாளியத்தின் இரண்டு காலகட்டங்களிலும், தேசிய இயக்கம் அதன்சாரத்தில் தேசியத் தொழில்களின் ஒன்றுதிரட்டலிலும் வளர்ச்சியிலும் கவனம் கொண்டதாகவோ அல்லது காலனித்துவத்திடமிருந்து தேசியத் தொழில்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டதாகவோ இருந்தது. ஏகாதிபத்தியத்தின் புதிய காலனித்துவக்கட்டத்தில், புதியகாலனியக் கொள்ளையைக் கணக்கில்கொள்ளும்போது தேசியத்தொழிலை மறுவரையறை செய்யவேண்டிய தேவை ஏற்படுகிறது. பழைய காலனியத்தோடு ஒப்பிடுகையில் புதிய காலனியத்தின் அடிப்படைப் பண்புக்கூறுகளைப் பின்வருமாறு சுருக்கமாகத் தொகுக்கலாம்:

புதிய காலனியம் ஏகாதிபத்தியவாதிகளின் கொள்ளையடிப்புக்கான மறைமுகவழி மட்டுமே அல்ல, அதன் முறைகளும் வழிகளும் நாசகரமானவை மட்டுமே அல்ல, மாறாக அது பழைய காலனியத்திலிருந்து உள்ளார்ந்த வகையிலும் வேறுபட்டது.. சமயங்களில் அது பழைய காலனியத்திற்கு நேர் எதிரானதும் கூட! புதிய காலனியம் மிக நுட்பமாகச் செயல்படுகிறது, நம் ஒட்டுமொத்த வாழ்க்கையின் முழுமைக்குள்ளும் அது ஊடுருவி, வாழ்க்கையின் உள்ளடக்கம், சிந்தனை, செயல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகிறது..

காலனித்துவம் உள்நாட்டுத் தொழிலை நசுக்குவதன் மூலம் அதன் அதிகாரத்தை நிறுவியது. ஆனால் புதிய காலனியமோ உள்நாட்டுத் தொழிலை 'மேம்படுத்துவதன்' மூலம் ஆட்சி செலுத்துகிறது! நிலப்பரப்புத்துவம்தான் காலனித்துவத்தின் சமூக அடித்தளமாகும். ஆனால் தரகு முதலாளியமும் நிலப்பிரபுத்துவமும் புதிய காலனித்துவத்தின் அடித்தளங்களாகும். அதற்கேற்ப சமூக அடித்தளம் மறுகட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது. புதிய காலனித்துவத்தில் மய்யப்படுத்துதல் என்பது முக்கியமான உந்துவிசையாகும்.

முந்தைய முதலாளிய, காலனியக் கட்டங்களில், அறிவியல் தொழில்நுட்ப

மேம்பாடுகள் சமூகத்தை ஜனநாயகப்படுத்த உதவின. ஆனால் புதிய காலனியத்தில் நவீன அறிவியலும், தொழில்நுட்பமும் மனிதனை இயற்கைக்கு எதிராக நிறுத்துகின்றன. இவ்வாறு அவை சமூகத்தை அதிகளவு பாசிசமயமாக்குவதற்குக் காரணமாக அமைகின்றன. மூலதன ஏற்றுமதி என்பது முதலாளித்துவத்தின் சிறப்புப் பண்பாக இருந்தது. ஆனால் நவீனஅறிவியல் ஏற்றுமதியும் தொழில்நுட்ப ஏற்றுமதியும் புதிய காலனித்துவத்தின் அடிப்படைகளாக உள்ளன. இவையிரண்டும் கட்டுப் படுத்தவும் சுரண்டுவதற்குமான கருவிகளாக உள்ளன.

சுருக்கமாகச் சொன்னால் “கட்டுப்படுத்தவும் சுரண்டவும் அழித்தொழி” என்பது பழைய காலனியவாதிகளின் மைய முழக்கமாகும். “கட்டுப்படுத்தவும் சுரண்டவும் ‘மேம்படுத்து’” என்பது புதிய ஏகாதிபத்தியத்தின் மையப் பேசுபொருளாகும். எனவே புதிய காலனிய வளர்ச்சி என்பது நமது சமூக, பண்பாட்டுக் கட்டுமானத்தை அழிப்பதோடு மட்டுமின்றி, நமது வாழ்வாதாரத்தையும் அழித்து விடுகிறது. எனவே இது மேலும் நாசகரமானதும், பேரழிவை ஏற்படுத்தக் கூடியதும் ஆகும்.

மேலும் பொதுவாகவே, புதிய காலனியத்தின்கீழ் புதிய காலனிகள் எதிர்கொள்வதற்கு ஒரு குறிப்பிட்ட ஏகாதிபத்தியம் என்ற ஒன்றில்லை. இதன் காரணமாகப் புதிய காலனிகள், இந்த அல்லது அந்த ஓர் ஏகாதிபத்தியச் சக்தி அல்லது சக்திகளிடமிருந்து என்றில்லாமல், ஒட்டுமொத்த ஏகாதிபத்திய அமைப்பிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டிய தேவையுள்ளது.

மேற்கண்டவற்றின் வெளிச்சத்தில் பார்க்கும்போது, ஏகாதிபத்தியம் ஓர் அமைப்பு என்ற அதன் பிடியிலிருந்து ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலை என்பதை இன்று தேசிய இனச் சிக்கலின் தீர்வு கவனத்தில் கொள்ளவேண்டி உள்ளது. இவ்வாறு இன்று அது அனைத்தும் தழுவிய விடுதலையாக உள்ளது. அதுவே அதன் சாரமாக உள்ளது .வெறுமனே தேசிய அரசுகள் அமைதல் அல்லது பிரிந்து போதல் என்பதாக இல்லை. மாறாக, இத்தகையதொரு சூழலில் தமது நிகழ்ச்சி நிரலில் ஏகாதிபத்திய அமைப்பைத் தூக்கி எறியும் கண்ணோட்டத்தைக் கொண்டிராத தேசிய இயக்கங்கள், வேறொரு போர்வையில் அடிமைத்தனத்தைத் தொடர்ந்து நீடித்திருக்கச் செய்வதோடு அவை சாரத்தில் எதிர் விளைவையே உண்டாக்கும். வேறு சொற்களில் கூறுவது என்றால், ஏகாதிபத்தியங்கள் தமது ஏகாதிபத்திய அமைப்பின் நலனை நீடித்திருக்கச் செய்யவேண்டி, சமூக மறு கட்டமைப்பை நோக்கமாகக் கொண்டிராத பிரிவினைகளை ஊக்குவிக்கின்றன.

எது எப்படியிருப்பினும், புதிய காலனிய நாடுகளில் தேசிய இனச் சிக்கலைத் தீர்ப்பதற்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு உள்ளடக்கத்தோடு தேசிய விடுநலைப் போராட்டத்தைத் தொடர்வது தேவையாகிறது.

மறுபுறம் தேசங்களின் சிறைக்கூடங்களாக உள்ள புதிய காலனிய நாடுகள் புதிய ஏகாதிபத்திய அமைப்பிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டுமெனில், அவை தேசிய இனச் சிக்கலைத் தீர்க்க வேண்டியது இன்றியமையாதது ஆகும்.

எனவே தேசிய விடுதலை அரசியல் இயக்கமானது ஏகாதிபத்திய அமைப்பை அகற்றிவிட்டு மாற்றாக அதன் இடத்தில் அந்த நாட்டுக்குரிய (**indigenous**) மக்கள் அமைப்பை ஏற்படுத்தும் நோக்கத்தோடு அணிதிரட்டும் போது மட்டுமே, அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதானது பொருத்தமானதாகவும் பொருளுடையதாகவும் இருக்கும். இவ்வகையில் சோவியத் யூனியன் நமக்கு ஒரு முன்னெடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. அங்கு முக்கிய துறைகளில் சோசலிச இலட்சியங்களை அடைவதற்குச் சோசலிசம் அற்ற வழிமுறைகள் முயற்சிக்கப்பட்டன, வழிமுறைகள் நோக்கங்களைச் சிதைத்தன, எந்த அமைப்பை ஒழித்துக் கட்ட அவர்கள் விரும்பினார்களோ, அது மீண்டும் அமைந்திடவும் வலிவு பெறவுமே அவை உதவின.

இந்தியா போன்ற ஒரு நாட்டில் மக்கள் வாழ்வின் ஒட்டுமொத்தப் பரப்பையும் தழுவிய அந்த நாட்டுக்கே உரிய மக்கள் இயக்கம் ஒன்றை வளர்த்தெடுக்கும்போது தான் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமானது

பொருள் உள்ளதாக இருக்கும். தேசிய இன சிக்கலைத் தீர்ப்பது அல்லது பல்வேறு தேசிய இனங்களின் இயக்கத்துடன் தேசிய விடுதலைப் போராட்டத்தைத் தொடர்வது என்பது ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் ஒன்றை வளர்த்தெடுப்பதற்குத் தேவையான மூலவுத்தியாக இருக்கும்.

வேறு சொற்களில் சொல்வதென்றால் தேசியக் கட்டமைப்புகள் அனைத்துச் சமூக ஆய்வுகளுக்கும் சமூக வடிவமைப்புக்கும் அடிப்படையாக அமைகின்றன.

மொத்தத்தில் மையப்படுத்துதல் உண்மையாகவே மக்களுக்கு எதிரானதாகும். கூடுதலான தன்னாட்சியையும், மையத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையில் கூடுதலான மூலவளங்கள், வருவாய் ஆதாரங்கள் பகிர்வையும் மாநிலங்கள் கோருவது, மையப்படுத்தலுக்கு எதிரான வளர்ந்து வரும் தேசிய உணர்வின் அறிகுறிகளே ஆகும்.

பல்வேறு ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள் தனி மாநிலம் அல்லது தன்னாட்சிப் பகுதிகள் என்ற வடிவத்தில் தேசிய அடையாளத்தைக் கோருவது, அதிகரித்துவரும் அரசியல் அதிகார மய்யப்படுத்தலுக்கு எதிரான வெளிப்பாடே ஆகும். எடுத்துக்காட்டு; கோர்க்காலாந்து, போடோலாந்து ஜார்கண்டு சத்தீஸ்கர் விதர்பா முதலியவை .



மையப்படுத்தலுக்கு எதிரான இந்த இயக்கங்கள் பொருளுள்ளவையாக இருக்க வேண்டுமெனில், அதிகாரப்பரவலாக்கல் சிற்றூர் அல்லது அதனினும் சிறிய ஊர் மட்டத்திற்கு சென்றடைய வேண்டும். தேசம் அல்லது தேசிய இனத்திற்குள்ளே இருக்கும் சமூகப் பண்பாட்டு அடையாளங்களின் வேறுபாடுகளையும் பன்மைத் தன்மையையும் போற்றவும் அறிந்தேற்கவும் வேண்டும்


நமது சமூகத்தை வலிந்து ஒருமைப்படுத்த முயற்சிப்பது மையப்படுத்தலின் இன்னொரு நீட்சி தான். இந்துத்துவச் சித்தாந்தத் திணிப்பும் அகண்ட பாரதத்திற்கான அறைகூவலும் கூட வலிந்து ஒருமைப்படுத்தலின் வெளிப்பாடுகளே. இந்தி பேசாத மக்கள் மீது இந்தியைத் திணிப்பதும் கூட சமூகத்தை இந்து இந்தித் தேசமாக ஒருமைப்படுத்துவதற்கான மற்றுமொரு முயற்சிதான். சமூக, பண்பாட்டு, மொழி சார்ந்த கட்டுமானத்தின் பன்மைத் தன்மையையும், வேறுபாடுகளையும் நோக்குகையில், வலிந்து ஒருமைப்படுத்துதல் நடைமுறைப்படுத்தப்படுமானால், அது ஒருவர் தன் சொந்த அடையாளத்தை வன்முறை வடிவத்தில் வலியுறுத்துவதற்குத் தவிர்க்க இயலாமல் வழி வகுக்கும்.

புதிய காலனியமானது ஒரு சர்வதேச அமைப்பாக இருக்கும் போது தேசிய விடுதலை இயக்கங்கள் தன்னந்தனியானவையாக இயங்க முடியாது. உள்நாட்டு மக்களின் அரசியல், பண்பாடு, சமூக, நில உரிமைகளை வலியுறுத்தும் தேசிய ஜனநாயக இயக்கங்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளவும், பொதுஎதிரிக்கு எதிரான சாத்தியமான நடைமுறை ஏற்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளவும், பல்வேறு இதர மக்கள் இயக்கங்களோடு ஒரு கூட்டணியை உருவாக்கிக் கொள்ள வேண்டிய தேவையுள்ளது. இவ்வாறு இந்தியத் துணைக்கண்டத்தில் பல்வேறு தேசிய ஜனநாயக இயக்கங்கள் ஒன்றுபட்டு இயங்க ஏதுவான கூட்டமைப்பு உருவாவதோடு மட்டுமின்றி, ஆப்பிரிக்கா ஆசியா, ,இலத்தீன் அமெரிக்கா இயக்கங்களோடு சேர்ந்தியங்கும் அமைப்பாகவும் அது உருவெடுக்கும்.

சில தேசிய இயக்கங்கள் இனவெறி, பாசிச ஆற்றல்களாகச் சீரழிந்து போயுள்ளதை நாம் ஆழமாகப் பரிசீலிக்க வேண்டியுள்ளது. புதிய காலனிய நிலைமைகளின் கீழ் தேசிய இனச் சிக்கலைச் சரியாகப் புரிந்து கொள்ளாததாலும், மரபான தப்பெண்ணங்களின் காரணமாக இடதுசாரிகள் தேசிய இனச் சிக்கலை ஆதரிக்கத் தவறியதாலும், அவ்வியக்கங்களுக்குத் தலைமை தரத் தேவையான முன் முயற்சிகளை எடுக்கத் தயங்கியதாலும் இது நிகழ்ந்துள்ளது. இத்தகைய நிலைமைகளில் இந்த இயக்கங்களை முன்னெடுத்துச் செல்லும்

முதலாளிய மற்றும் குட்டி முதலாளிய ஆற்றல்கள் தம்மோடு இனவாத பண்புக் கூறுகளையும் எடுத்துச் செல்வது வியப்பளிக்கக்கூடிய செய்தி அல்ல. இந்த இயக்கங்களில் பெண்கள் தலித்துகள் அந்த நாட்டு மக்கள் ஆகியோரின் அதிகரிக்கும் பங்களிப்பு மட்டுமே, இந்த இயக்கங்களின் ஜனநாயக கண்ணோட்டத்தையும் உணர்வையும் நீடித்திருக்கச் செய்வதற்கான ஒரே வழியாகும்.

சுற்றுச்சூழல் இயக்கங்கள், சூழலிய இயக்கங்கள், அணு எதிர்ப்பு இயக்கங்கள்,பெண்கள் இயக்கங்கள் மத, தேசிய சிறுபான்மையினர் இயக்கங்கள் ஆகியவை கூலி உழைப்பு, மூலதனம் என்ற சட்டகத்தைத் தாண்டி நம்மைப் பார்க்க வைத்தன; மேலும் அவை ஒரு மாற்று அமைப்புக்குத் தேவையான கண்ணோட்டத்தின் பரிணாம வளர்ச்சிக்கும் குறிப்பிடத் தகுந்த அளவிற்குப் பங்களிப்புச் செய்தன.



இதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். இருந்த போதும், இந்த இயக்கங்கள் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான தேசிய விடுதலை என்ற உள்நாட்டு மக்களின் அரசியல் நிகழ்ச்சி நிரலையும், தேசிய உள்ளடக்கத்தையும், தற்சார்பை நோக்கிய வடிவத்தையும் தன்னகத்தே கொண்டுள்ள ஒருங்கிணைந்த ஒரு முழுமையாகத் தம்மை ஒன்றிணைத்துக் கொள்ளாவிட்டால், அவை பயனற்றவையாக மாறுவதோடு, எந்த மக்களுக்காகப் போராட வந்தார்களோ, அவர்களுக்கே எதிரான ஓர் ஆற்றலாகச் சீரழிந்து போய்விடுவார்கள்.

புதிய காலனிய நிலைமைகளில் தேசிய விடுதலை இயக்கம் ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆற்றலாக உருவெடுக்காமல் தேசிய இன சிக்கலைத் தீர்க்க முடியாது. அதே சமயம் தற்சார்புத் தேசியத்தை வடிவமாகவும், ஏகாதிபத்தியத்தை அகற்றுவதை உள்ளடக்கமாகவும் கொண்ட ஆற்றலாகத் தன்னை வளர்த்துக் கொள்ளாதவரை, எந்த ஓர் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமும் பொருண்மை ஆற்றலாக உருவாக முடியாது.

இடதுசாரிகளின் தேச உடமையாக்கல் என்ற முழக்கமானது இன்று அரதப் பழசாக மாறிவிட்டது. புதிய காலனியம் இந்த முழக்கத்தை கேலிக்கூத்தாக்கிவிட்டது. தற்சார்பில்லாத சுதேசி என்ற முழக்கமும் கூட ஒரு கேலிக்கூத்து தான்.

பசுமைப் புரட்சியானது உயிர் பிழைத்திருத்தலையே அழித்துக் கொண்டிருக்கும் போது, வேதியல் உரத்தொழிற்சாலை ஒன்று உள்ளூர்க்காரருக்கு உடமையாக உள்ளதா அல்லது வெளியூர்க்காரருக்கு உடமையாக உள்ளதா என்ற கேள்வி பொருள் அற்றதாகும். உழவுத்தொழில் மேலும் வணிகமயமாகுவதை நீடித்திருக்கச் செய்யும் தொழில்நுட்பம் மக்களைத்தம் நிலம் சுற்றுச்சூழல்களிலிருந்து அந்நியமாக்குவது தவிர்க்க முடியாதது. நிலத்தைப் பயன்படுத்தும் விசயத்தில் தற்சார்பை இழப்பதும், அதன் விளைவாக ஒருவரது தன்னம்பிக்கையை அழிப்பதும், இறுதியில் நம்மை அக வகையிலும் புற வகையிலும் அழித்துவிடும்.

புதிய பொருளியல் கொள்கையின் தாக்கத்தில் முழுதாக அகற்றப்படும் நிலையை எதிர்கொண்டிருக்கும் பொதுத்துறை அலகுகள், தேச உடைமையாக்கல் என்ற முழக்கத்தை எழுப்புவதன் மூலம் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது.. தொடர்புடைய மக்கள் சமூகமயமாக்கல் நிகழ்வுப் போக்கை மேற்கொள்ளும் போதுதான் தேச உடைமையாக்கல் (பரந்துபட்ட சமூகத்தின் நிலைத்திருக்கத்தக்க நலன்களுக்காகப் பண்டங்களின் உற்பத்தியும் பகிர்வும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே சமூகமயமாக்கலின் பொருளாகும்.) என்பதன் உயிர்ப்புப் பாதுகாக்கப்படும். இது வெறுமனே தற்சார்பு (சுதேசி) பற்றிச் சிறுபிள்ளைத்தனமாகப் பிதற்றிக் கொண்டிராமல் தற்சார்பை ஊக்குவிக்க வேண்டும்.

# பயங்கரவாதமும் பாஜகவும்

- தோழர் மாரியப்பன்

டெல்லி பாராளுமன்றத்தின் மீது 2001ல் ஆயுதங்களுடன் ஐவர் தாக்குதல் நடத்திய 22 ஆண்டுகளுக்கு பின் அதே தேதியில் புதிய பாராளுமன்றத்தின் ஐந்து கட்ட பாதுகாப்பையும் கடந்து பார்வையாளர்கள் மாடத்தில் இருந்து குதித்த இரு இளைஞர்கள் புகை கக்கும் குப்பிகளை வீசியும் மேசைகளில் தாவிக் குதித்து சபாநாயகர் இருக்கையை நோக்கி ஓடியதும் இந்தியா முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. மேலும் ஒரு பெண்ணுடன் இன்னொரு இளைஞர் கட்டிடத்தின் வெளியே இதே போன்ற புகைக் குப்பியை வீசி, சர்வாதிகாரத்தை எதிர்ப்போம், மணிப்பூருக்கு நியாயம் வேண்டும்,

பாரதி மாதக் கீ ஜே, ஜெய் பீம், வந்தே மாதரம் என பல முழக்கமிட்டதாக செய்திகள் வந்தன. அவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டனர். மறுநாளே மேலும் இருவர் கைதாயினர். ஐந்தாவதாக கைதான லலித் ஜா என்பவர் தான் இந்நிகழ்வைத் திட்டமிட்டார் என செய்திகள் வருகின்றன.

புகைக் குண்டு வீச்சு ஏன் எதற்காக நடைபெற்றது, இதன் நோக்கம்,பின்னணி என்ன என்பது குறித்து பல விதமாக பார்க்கப்படுகிறது.

* பாதுகாப்பு குறைபாடுதான் காரணம், பாராளுமன்றத்தையே ஆளும் பாஜக அரசால் பாதுகாக்க முடியவில்லை இவர்கள் எவ்வாறு இந்தியாவை காப்பார்கள்?

* இதற்கு பொறுப்பேற்று அமித்ஷா பதவி விலக வேண்டும் என்று எதிர்கட்சித் தலைவர்கள் கோருகின்றனர்.



* இந்தியாவில் படித்த வேலையில்லாத இளைஞர்களின் கோபத்தின் வெளிப்பாடு இது. வேறு வகையான ஜனநாயக போராட்டங்களை நடத்த அனுமதிக்காததால் நாட்டையே திரும்பி பார்க்க வைக்க இதுதான் வழி. இவர்கள் பயங்கரவாதிகள் அல்ல. பயன்படுத்தியதும் வண்ண புகை கக்கும் குப்பிகள் தான் என்றும் பார்க்கப்படுகிறது.

* பொருளாதார வளர்ச்சி, விலைவாசி, வேலைவாய்ப்பு இன்மை என எல்லாத் துறைகளிலும் தோல்வியடைந்து வரும் பாஜக அரசு 2024 தேர்தலுக்காக நடத்த இருக்கிற நாடகத்தின் முதல் காட்சி புகைக் குண்டு வீசிய நிகழ்ச்சி என மூன்றாவது கருத்தும் நிலவுகிறது.

* பொதுவாக இத்தாக்குதல் 2001 தாக்குதல் போன்ற பயங்கரவாதத் தாக்குதல் இல்லை எனவும் கருதப்படுகிறது.

இந்த நிகழ்வுக்கு பாராளுமன்றத்தின் பாதுகாப்பு குறைபாடு என்ற முதல் பார்வை

மிக எளிதானது. பாதுகாப்பைப் பலப்படுத்தி விட்டால் இது போன்ற அத்துமீறல்களைத் தடுத்து விடலாம். மேலும் பார்வையாளர்களை தீவிர சோதனைக்குப் பிறகு அனுமதிக்கலாம். அல்லது பார்வையாளர்களை அனுமதிக்கவே வேண்டாம் எனக் கூறுபவர்களும் உள்ளனர். அடுத்து இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த, இந்தியாவை நேசிக்கின்ற, வேலையற்ற இளைஞர்கள் பகத்சிங் ஃபேன் கிளப் என்ற சமூக ஊடகத்தின் மூலம் இணைந்து பகத்சிங்கைப் போலவே நாட்டிற்கு ஏதேனும் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டவர்கள் இவர்கள் என ஊடகங்கள் கூறுகின்றன. நாட்டின் படித்த வேலையில்லாத கோடிக்கணக்கான இளைஞர்களின் அடையாளமாக அவர்களின் ஏமாற்றத்தை வெளிப்படுத்தும் வகையில் இச்செயலைச் செய்திருந்தால் ஏற்கக்கூடியதே.

ஆனால் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த இனம் சார்ந்த மற்றும் மொழி பேசுபவர்கள் வகுப்பைச் சேர்ந்த குறிப்பான கொள்கைப் பிடிப்பும் அற்றவர்கள் இதன் விளைவுகளைப் பற்றி எந்த தெளிவும் இருப்பதாக இன்று வரை தெரியவில்லை. வரும் பாதிப்புகளைப் பற்றி கவலைப் படாமல் ஆறு பேர் இத்தகைய செயலைச் செய்தார்கள் என்பதை நம்ப முடிய வில்லை. இச்செயலில் வேறு சிலரது பங்கும் இருக்கலாம். அவர்களது ஆதரவும் உள் நோக்கமும் இதற்கு காரணமாக இருக்கலாம். காலம்தான் இதற்கு விடை சொல்லும்.

இறுதியாக மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி 2024 தேர்தலுக்காக இச்செயலை அரங்கேற்றி உள்ளதா என்றால் அதற்கு நிச்சயமாக வாய்ப்பு உள்ளது. இதற்கு எண்ணற்ற முன் உதாரணங்கள் உள்ளன. ஆர்எஸ்எஸ் மற்றும் சங்கபரிவார்கள் கடந்த 60 ஆண்டுகளாக எவரும் கற்பனை கூட செய்ய முடியாத அளவிற்கு சதிவேலைகளை நிகழ்த்தி இந்த நாட்டையே அச்சத்தில் ஆழ்த்தி உள்ளனர்.



தாங்கள் ஆட்சி அதிகாரத்தில் இல்லாத போதும் அரசின் உயர்மட்டத்தில் எங்கும் நிறைந்துள்ள உள்ள ஆதரவாளர்களின் உதவியுடன் அனைத்து பயங்கரவாதச் செயல்களைச் செய்து விட்டு தாங்கள் தான் தேசப் பக்தர்கள் என பறைசாற்றும் வல்லமை கொண்டவர்கள் இவர்கள் தேசத்தந்தை எனப்படும் காந்தியையே விடுலையடைந்த ஆறு மாதங்களுக்கு உள்ளேயே படுகொலை செய்து விட்டு பழியை இஸ்லாமியர்கள் மீது சுமத்த இஸ்மாயில் என கையில் பச்சை குத்துதியிருந்தான் பார்ப்பன கோட்சே.

2000-2010 நிகழ்ந்த பல குண்டு வெடிப்புகளில் ஒன்றான சம்ஜோதா இரயில் குண்டுவெடிப்பில் 70 பேர் இறந்தனர். பாகிஸ்தான் பயங்கரவாதிகளே காரணம் என்றன ஊடகங்கள், ஆனால் குண்டு வைத்தவனோ சங்கபரிவாரைச் சேர்ந்த சுவாமி அசீமானந்தா என்பவன். மராட்டியத்தி நடந்த பூனா ஜெர்மன் பேக்கரி, மலேகான் மசூதி, வாஷி,தானே, அஜ்மீர் தர்கா ஆகிய பல இடங்களில் நடந்த தொடர்குண்டு வெடிப்பில் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். வழக்கம்போல இஸ்லாமியர் குற்றம் சாட்டப்பட்டனர் மும்பை மாநகர கிஜிஷி என்ற பயங்கரவாதத்திற்கு எதிரான படையின் தலைமையில் இருந்த ஹேமந்த் கர்கரே என்ற நேர்மையான அதிகாரி ஆர்எஸ்எஸ் அமைப்போடு தொடர்புடைய சுவாமி அசீமானந்தா சாத்வி பிரக்ஞ்யா இன்னும் சிலருடன் இராணுவ அதிகாரியான புரோகித் என்பவனும் கைது செய்யப்பட்ட பின்தான் குண்டு வெடிப்புகள் அனைத்துமே இவர்களின் சதிவேலைதான் என்ற உண்மை தெரிந்தது. இராணுவத்தின் ஆர்.டி.எக்ஸ். குண்டுகள் பயன்படுத்த பட்டதும் தெரிய வந்தது.

ஆனால் இதை வெளியே கொண்டுவந்த கர்கரே 9/11 மும்பைத் தாக்குதல் என்றழைக்கப்படும் சம்பவத்தின் போது சந்தேகத்துக்கு இடமான முறையில் கொல்லப்பட்டார். சனாதன இந்துத்துவ சக்திகள் அந்த அளவிற்கு அரசு இயந்திரத்தில் ஊடுருவி உள்ளனர்.

தோழர் "குரோ" வாசு வரவேற்பு - பாராட்டு நிகழ்வு கோவை 26 11 23



கர்கரே யின் மரணத்திற்கு பிறகு வழக்கின் திசையே மாறியது. பிணையில் வந்த பெண் பயங்கரவாதி சாத்வி பிரக்ஞ் யா 2014 பாராளுமண்றத் தேர்தலில் போபால் தொகுதியில் பிஜேபி வேட்பாளராக நின்று இந்துக்களை காக்க சிறை சென்றவர் எனப் பாராட்டப் பட்டார். பெரும் வெற்றியும் பெற்றார். பயங்கரவாதியை தேச பக்தன் ஆக்கும் மாயவித்தை அறிந்தவர்கள் இவர்கள். 2019ல் குற்றமற்றவர்கள் என விடுதலையும் அடைந்தார்கள்.

தேர்தலில் வெற்றிபெற எந்த அளவுக்கும் செல்வார்கள் என்பதை புல்வாமா தாக்குதல் நமக்கு தெளிவாகக் காட்டியுள்ளது. அன்றே பலரும் சதி வேலை எனச் சந்தேகப் பட்டதை அண்மையில் அப்போது ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் கவர்னராக இருந்த சத்ய பால் மாலிக் 2019 பாராளுமன்ற தேர்தலுக்கும் இச்சம்பவத்திற்கும் ஆன தொடர்பைப் பற்றிய தனது ஐயத்தின் மூலம் உறுதிப்படுத்திள்ளார். 40 இந்திய ராணுவ வீரர்கள் அநியாயமாகப் பலியிடப் பட்டனர் என்பதை நாம் அறிவோம். இதை எவரும் கேள்வி கேட்க இயலாது ஏனெனில் தேசத்திற்கு எதிரானது இம்மாதிரியான கேள்வி.

இன்றைய பாராளுமன்ற புகைக் குண்டு வீச்சும் மேற்கூறியதைப் போலவே அப்பாவி இளைஞர்களின் உண்மையான கோபத்தை பயன்படுத்தி ஆர்எஸ்எஸ் சங்கபரிவார் கூட்டத்தினர் நிகழ்த்திய சதிவேலையாக இருக்க வாய்ப்புள்ளது. கருத்துக் கணிப்புகளை தலைகீழாக்கிய சமீபத்திய தேர்தல் முடிவுகள் வாக்குப் பதிவு இயந்திரத்தின் நம்பகத்தன்மை கேள்விக்குள்ளாக்கி உள்ளது. ஐந்து மாநிலத் தேர்தலுக்கு பின் பெருத்த சந்தேகங்கள் வட மாநிலங்களிலேயே பரவி வருகிறது. இதை மடைமாற்றவும், 370 சட்டப் பிரிவு நீக்கம் குறித்த உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக வளர்ந்துவரும் எதிர்ப்பை சரிகட்டவும் இதைப் போன்ற சித்து விளையாட்டுக்களை சங்கப் பரிவார கும்பல்கள் நிச்சயமாக செய்திருக்கக் கூடும். எதிர்பார்த்தது போல மூன்று நான்கு நாட்கள் இதைப் பற்றிய செய்திகளே ஊடகங்களில் நிறைந்திருந்தன.

இத்தகைய சதிகாரர்கள் கூட்டத்திடம் இருந்து இந்திய மக்களைக் காக்க தேசிய இனங்களின் உரிமைகளைக் காக்க, உழைக்கும் மக்களின் உரிமைகளைக் காக்க, மொழி இனச் சிறுபான்மை மக்களின் உரிமைகளைக் காக்க பார்ப்பன குஜராத்தி பனியாக்களுக்கு ஆதரவான ஆர்.எஸ்.எஸ்.ன் அரசியல் பிரிவான பாரதிய ஜனதா கட்சியினை வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தோற்கடிப்பதே ஜனநாயக சக்திகள் முன் உள்ள ஒரே வழியாகும்.

# குலத் தொழிலை வளர்க்கவே விஸ்வகர்மாத் திட்டம்

- மு.வேதரத்தினம்

2014இல் இந்திய ஒன்றிய ஆட்சியைப் பிடித்து 2019லும் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிப் பெற்று கடந்த ஒன்பது ஆண்டுகளாக இந்திய ஒன்றியத்தை வலதுசாரி கார்ப்பரேட் இந்துத்துவா சார்பு சீரழிவு ஆட்சி நடத்தி வருகிறார் பிரதமர் நரேந்திர மோடி. இந்த ஆண்டு அக்டோபர் மாதம் பரம்பரை மரபு சாதிவழி தொழில்கள் செய்து வருபவர்களுக்கு கடன் உதவிகள் மானியம் வழங்குவதற்காக விஸ்வகர்மா திட்டம் என்ற பெயரில் குலத்தொழில் திட்டத்தை கொண்டு வந்துள்ளார். 2023-2024 இந்த நிதியாண்டில் இதனை செயல்படுத்துவதற்காக 13,000/= கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆர்எஸ்எஸ் அமைப்பின் வர்ண சாதி ஏற்றத் தாழ்வுகளை ஏற்று வர்ண சாதிகள் அடிப்படையில் இந்தியாவை இந்து இராஷ்ட்டிரமாக மாற்றும் நோக்கத்துடன் வெளிப்படையாக அடிக்கல் (கால்கோள்) நாட்டியுள்ளார் மோடி.

## விஸ்வ கர்மாத் திட்டம் நடைமுறைப்படுத்தும் விதம்

இத்திட்டத்தின்படி பரம்பரையாக குலத் தொழில்கள் செய்யும் கொல்லர், பொற்கொல்லர், தச்சர், மண்பாண்டம் செய்பவர், படகு செய்பவர், முடி திருத்துபவர், சலவைத் தொழிலாளி, தையல் தொழிலாளி, மீன்பிடி வலை செய்பவர், பூமாலை கட்டுபவர், பொம்மை செய்பவர், கூடை முடைபவர், சிற்பி, பூட்டு தயாரிப்பவர், கல் உடைப்பவர், சுத்தியல் மற்றும் இரும்பு வேலை செய்பவர், செருப்பு தைப்பவர், பரம்பரை ஆயுதம் தயாரிப்பவர் உள்ளிட்டோர் இடம் பெற்றுள்ளனர். இதரத் தொழில்கள் பின்னர் இணைக்கப்படும்.

கிராம நிர்வாக அலுவலர் (**V.A.O**) அரசு வருவாய் ஆய்வாளர் (**R.I**) ஆகியவர்களிடம் விஸ்வ கர்மாத் திட்டத்தில் கடன் மானியம் கோரி பதிவு செய்ய வேண்டும். இந்த அரசு அலுவலர்கள் இவர்கள் பரம்பரை சாதித் தொழில்கள் செய்வதை உறுதி செய்து சான்றிதழை வழங்குவார்கள். இந்த சான்றிதழ் பெற்ற பின் கைவினைஞர்கள் விஸ்வ கர்மா யோஜனா திட்டத்தின் கீழ் இந்திய ஒன்றிய அரசு அளிக்கும்5 நாட்கள் அடிப்படை பயிற்சியில்ஷ் (**Basic 5 days training)** பெற வேண்டும்.

இந்த 5 நாட்கள் பயிற்சியிலும் கலந்து கொள்பவர்களுக்கு தினமும் ஒன்றிய அரசு ரூ.500/ உதவித்தொகை (**Straibund)** வழங்கும். இந்த பயிற்சியை முடித்தவர்களுக்கு முதல் தவணையாக ரூ.1,00,000/ வரை கடன்களை இந்திய ஒன்றிய அரசு பொதுத்துறை வங்கிகள் மூலம் 13 விழுக்காடு ஆண்டு வட்டியில் வழங்கும். முறையாக கடனை மாதம் தவறாது கட்டுபவர்களுக்கு 8 விழுக்காடு வட்டியை இந்திய ஒன்றிய அரசே செலுத்தும். மீதி 5 விழுக்காடு வட்டியை மட்டும் மாதந்தோறும் கடன் பெற்ற கைவினைஞர்கள் செலுத்தினால் போதும்.

இந்த விஸ்வ கர்மாத் திட்டத்தின் மூலம் கடன் உதவி பெறுபவர்களிடம் கடன் தரும் வங்கிகள் எந்த சொத்து பிணை அடமானமும் கேட்காது. இப்படி ஒரு இலட்சம் ரூபாய் கடன் பெறுபவர்கள் 18 மாதங்களில், அதாவது ஒரு ஆண்டுகளில் கடனை முழுவதும் கட்டிவிட்டால் பின்னர் இந்திய ஒன்றிய அரசின் இரண்டாம் கட்ட 15 நாட்கள் பயிற்சி சான்றிதழ்கள் பெற வேண்டும். இதற்கு முன்னேறிய பயிற்சி (**Development training**) என்று பெயர். இந்த இரண்டாம் கட்ட பயிற்சியை முடித்தவர்களுக்கு இன்னொரு இரண்டு இலட்சம் ரூபாய் கடனாகக் கிடைக்கும். இந்த திட்டத்தை டெல்லியில் குரு சீட பரம்பரை பொருட்காட்சி வளாகத்தில் மோடி திறந்து வைத்தார்.

இந்த திட்டத்தை ஊக்குவிக்க அரசே கண்காட்சி அரங்குகள், கருத்தரங்குகள் ஆகியவற்றை நடத்தி இத்திட்டத்தில் தயாரிக்கப்டும் பொருட்களை அரசே சந்தைப்படுத்தும் பணிகளைப் பார்க்கும் என அறிவித்துள்ளது. மேலும் இத்திட்டத்தில் மரபு சாதி வழி கைவினைஞர்கள் தயாரிக்கும் பொருட்களை தனியார் கார்பரேட் நிறுவனங்கள் வாங்கிக் கொள்ள அரசே ஒருங்கிணைப்பு ஏற்பாடு பணிகளைப் பார்க்கும்.

1980,1995ஆம் ஆண்டுகளில் சுதேதி பொருளாதாரம், காந்திய சோசலிசம் பேசிய ஆர்எஸ்எஸ், பிஜேபி யினர் 1998 2004இல் வாஜ்பாய் கால ஆட்சியாகட்டும், 2014-2022 கால மோடியின் ஆட்சியாகட்டும் நேர் எதிராக தனியார் கார்பரேட் சுரண்டல் பொருளாதாரத்தையும் இந்து மதவெறி அரசியலையும் அமுல்படுத்துகின்றனர்.

இன்றைய புதிய காலத்தில் 1991ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டு வரும் உலகமயமாக்கல், புதிய தாராள, தனியார்மயமாக்கல் பொருளாதார கொள்கைக்கேற்ப வர்ண சாதிகளை மறு கட்டமைப்பு செய்கிறார்கள். ஆர்எஸ்எஸ், பிஜேபி யினர் பேசிய சுதேசி பொருளாதாரத்தை வாஜ்பாய் ஆட்சி காலத்திலும், மோடி ஆட்சி காலத்திலும் செயல்படுத்தாமல் தாராளமய, தனியார்மய, உலகமயமாக்கல் கொள்கைகளையே அமுல்படுத்தி பெரும் கருப்பு பண நன்கொடைகளை ஆர்எஸ்எஸ், பிஜேபி கட்சிகளுக்குப் பெற்றுக் கொள்கின்றனர். இதன் விளைவாக இந்தியா முழுவதும் சுமார் ஒரு இலட்சம் சிறு, குறுந்தொழில்கள் மூடி கிடக்கின்றன. இந்நிறுவனங்களுக்கு மூலப் பொருட்கள் நியாயமான விலையில் கிடைப்பது இல்லை. உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்த முடிவதில்லை. மின்சாரத்திற்கு பணம் கட்ட இயலவில்லை. நடைமுறை மூலதனம் எல்லாம் பெருமுதலாளிய தாராளமய ஆதரவு கொள்கையால் சிறு நடுத்தர ஆலைகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன. சிறு தொழில்களுக்கு கடனுதவி வழங்க இவர்கள் செயல்படுத்தி வரும் முந்ரா ரோஜக் யோஜனா பெரிய அளவு பயனளிக்கவில்லை என்பது நடைமுறை தெளிவு. இவர்கள் சிறு தொழில்களை பாதுகாத்து வளர்த்து இருந்தால் இவர்கள் எதிரியாகக் கருதும் சீனா நாட்டிலிருந்து இவ்வளவு குடிசைத் தொழில் பொருட்கள் இந்தியாவுக்கு இறக்குமதி ஆகாது. இந்தியாவில் ஒரு இலட்சம் சிறு, குறு தொழில்கள் அழிந்து இருக்காது. இப்படி சிறு, குறு தொழில்களை அழித்துக் கொண்டு நேரு, இந்திராகாந்தி கால பொதுத்துறைகளை அழித்துக் கொண்டு தாராளமய, தனியார் மய, உலகமயக் கொள்கைகளை அமுல்படுத்திவரும் மோடி ஆட்சியின் அடுத்த சீரழிவுத் திட்டம் தான் பிரதம மந்தரி விசுவ கர்மா யோஜனா திட்டம்.

இத்திட்டம் மரபுவழி குலத்தொழில் புரியும் கைவினைஞர்களுக்கு தொழில் கடன்கள், கைக்கருவிகள் வழங்குவதால் சமூகத்தில் உளவியல் ரீதியாக கீழ்கண்ட சீரழிவுகளை ஏற்படுத்தும். ஒன்று. ஏழை எளிய கிராமப்புற மரபுவழி குலத்தொழில் செய்யும் கைவினைஞர்கள் தாங்கள் சாதி அடிப்படையிலான தொழிலுக்குள் கட்டுண்டு கிடப்பதை இது தொடர்ந்து உறுதி செய்யும். இரண்டு. இவர்களது பிள்ளைகள் அடுத்த இளைய தலைமுறையினர் மரபுவழி குலத்தொழில்களில் இருந்து விலகி புதிய கல்வி அரசு வேலை, மருத்துவர்கள், பொறியாளர்கள், வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள் ஆவதைத் தடுத்து மரபு வழி குலத்தொழில்களிலேயே அவர்களை முடக்கிப்போடும். மரபுவழி சாதிய குலத்தொழில்களை ஊக்கப்படுத்தும். மோடி அரசு புதிய தொழில் நுட்ப கல்வி கற்று சாதி கடந்து கைவினைதொழில்கள் புரிந்து வருபவர்களுக்கு எந்த உதவியும் செய்யவில்லை என்பதை கவனிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக. மின்சார கருவிகள் பழுது நீக்குகிறவர், வீட்டு மின்சார வேலைகள், குழாய் பணி பார்பவர், தொலைக்காட்சி பழுது நீக்குபவர், கைபேசி பழுது நீக்குபவர், மோட்டார் காயில் ரீவைண்டிங் செய்பவர், இருசக்கர, நான்கு சக்கர வாகன பழுது நீக்குபவர்; எல்லாம் ஐ.டி.ஐ. டிப்ளோமோ படித்துவிட்டு புதிய கல்வி கற்றுவிட்டு உள்ளூர் சூழலிலேயே புதிய முறையில் கைத்தொழில் செய்து வருகிறார்கள். இவர்களுடைய வாழ்க்கை ஏழ்மை நிலையிலேயே உள்ளது. சாதி முறைகளைக் கடந்து புதிய தொழில் நுட்ப உள்ளூர் கைவிளைஞர்களுக்கு எந்த உதவியும் செய்யாத மோடி அரசு, பரம்பரை குலத்தொழிலை ஊக்கப்படுத்தி குலத்தொழில் செய்யும் உள்ளூர் கைவினைஞர்களுக்கு விஸ்வ கர்மாயோஜனாத் திட்டத்தை அறிவித்து உள்ளது. இதன் மூலம் நிலவுடமை சாயதாய அமைப்பின் சாதிய முறைகளை புதிய கால சூழலுக்கு எற்ப தகவமைக்கிறது. ஏற்கனவே 2020 ஆம் ஆண்டு முதல் பிரதமர் மோடி தலைமையிலான அரசு நடைமுறைப்படுத்தி வரும் புதிய கல்வி கொள்கைக்கு மிகவும் நெருக்கமானது விஸ்வ கர்மா யோஜனாத் திட்டம். இந்துக்களின் பெயரால் அப்பாவி மக்களிடம் இந்து மத வெறியூட்டி ஆட்சி செய்யும் மோடியின் விஸ்வகர்மா யோஜனாத் திட்டம் படிநிலை சாதியமைப்பில் பிராமணிய மேலாண்;மையை நிறுவும் நோக்கம் கொண்டதாகும்.